
# மெய்யியல் நோக்கு

உண்மையை அறிந்துரை

# PHILOSOPHICAL JOURNAL



மனிதனே,
உருவாக்கும் சக்தி உனக்கு உண்டு அறிவாயோ?
உழைப்பிலே தியாகத்தின் சிகரமுண்டு உணர்வாயோ?
உன் அன்பிற்கு இணைக்கும் வலிமையுண்டு தெரியுமோ?
உன் விழிகளைத் திறந்து விழித்தெழு! இன்றே விழித்தெழு
உன் அடிமைத்தளைகள் உடையவேண்டும்

**உடனே விழித்தெழு!**

உண்மையை அறிந்துரை

விழி: 05 பார்வை: 01 ஐப்பசி, 2004

## உள்ளடக்கம்

1) அகத்தின் அழகு முகத்தில் தெரியும் - நுண்ணிய மன உணர்வுகளின் அறவியல்: ஒரு மெய்யியல் உசாவல்
- சா. பி. கிருபானந்தன்

The Beauty Of The Consciousness Is Seen On The Face -A Philosophical Appraisal
- S. F. Kirupananthan

2) ஆய்விற்கு ஒரு அறிமுகம்
- கேமமாலினி கணபதிப்பிள்ளை

Introduction to Research
- Hemamalini Kanapathipillai

3) இருட்டினிலே குருட்டாட்டம்
- சந்தேகி

Groping in Darkness
- Doubt fire

4) கொடுங்கோண்மை: ஓர் ஒப்பீட்டு நோக்கு
- ஆ. ஜஸ்ரின்

A Comparative Notion On Tyranny
- A. Justin

5) ஆன்மீகப் பண்பு
- வித்துவான் புலவர் "வேல்மாறன்"

Spiritual Character
- "Velmaran"

6) உட்பகை
- ஸ். டியூக் வின்சன்

Envy – According to Some Philosophers
- S. Duke Vincent

7) இலைபினிட்ஸ்
- ஜெ. எல்மோ

Gottfried Leibniz
- J. Elmo

Pu

Face

# மெய்யியல் நோக்கு

(வருடம் இருமுறை)

A PHILOSOPHICAL JOURNAL
(Bi – annual)

விழி: 05 பார்வை: 01 ஐப்பசி - 2004

**Publishers:**
Faculty of Philosophy
Xavier' Seminary
Columbuthurai
Jaffna
Sri Lanka.

**வெளியீடு:**
மெய்யியல் துறை
சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
இலங்கை.

"உண்மையை அறிந்துணர"

கல்வியாண்டு
**Academic Year** } 2004 - 2005

பருவம்
**Semester** } 01

ஐப்பசி – பங்குனி
September – March
**2004 - 2005**

# இருப்பியலும், பின்வாங்குதலும்

## சொரென் கீர்க்கெகாட்டின் இருத்தலியலை உள்வாங்குதல்

மனித இருப்பின் மிகவும் அடிப்படையானதும், துல்லியமானதுமான வெளிப்பாடு வாழ்க்கையாகும். "வாழ்க்கை வாழ்வதற்கே" என்ற கோட்பாடு நவீன இருத்தலியலின் குழந்தை எனலாம். அதே வேளை மனித வாழ்வை எதிர் நீச்சல் என்றும், தொடர் போராட்டம் என்றும் நவீன இருத்தலியலாளர்கள், குறிப்பாக உலகப் போர்களின் பின்னணியில் வாழ்ந்த இருத்தலியலாளர்கள் ஏற்றுக்கொண்டனர். வாழ்க்கை என்பது பிறக்கின்ற எல்லோருக்குமே அல்ல. அது போராடத் துணிந்தவர்களுக்கே சொந்தமானது.

மனித வாழ்வைப் போராட்டமாக ஏற்றுக் கொண்டவர்கள் மட்டுமே தமது மனித இருப்பைப் புரிந்து கொண்டவர்கள் என்பதை சொரென் கீர்க்கெகாட் ஆணித்தரமாக நிறுவியுள்ளார். தமது சொந்த வாழ்விலே ஆரம்பத்தில் ஒரு மதவாதியாக, பின்னர் ஒரு குடிகாரனாக, நாடோடியாக, இறுதியில் ஓர் ஆழ்ந்த சிந்தனாவாதியாக, அறிஞனாக வாழ்வின் எல்லா நிலைகளுக்குள்ளும் மோதுப்பட்டு வாழ்க்கை இதுதான் என்று தெளிந்தவர்.

அவர் மனிதர்களை அவர்களின் வாழ்வு முறையைப் பொறுத்து அடிப்படையில் இரண்டு வகையாகப் பிரித்தார். முதல் வகையினர் மனித இருப்பை, மனித வாழ்வை இன்னும் ஏற்றுக்கொள்ளாதவர்கள் அல்லது புரிந்து கொள்ளாதவர்கள். இவர்களது இருப்பு இறுக்கமற்றது, சீரற்றது. இவர்கள் தங்கள் சொந்தக்காலில் நிற்க முடியாதவர்கள். அதற்குத் திராணியற்றவர்கள். திரைக் கதாநாயக/நாயகிகளோ, விளையாட்டு வீர/வீராங்கனைகளோ அல்லது சமூகத்திலே உள்ள பிரபல்யமானவர்களே அவர்களது மாதிரிகள். அவர்கள் செய்வதை நம்மவர்கள் அப்படியே பின்பற்றுவார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்கள் சுய புத்தியை அவமதித்து பிரபல்யங்களின் பின்னால் செல்வார்கள். (carried away by heroes) இவர்களில் இன்னொரு சிலர் பிரபல்யங்களை விட்டுசமூகத்தில் சமகாலத்தில் எந்த ஒரு முயற்சி அல்லது போக்கு வரவேற்கப்படுகிறதோ அந்த நீரோட்டத்தில் கண்ணை மூடிக்கொண்டு குதிப்பவர்கள். (carried away by trends) இன்னொருசாரார் தமக்குள்ளே அதீத ஆசைகளை அல்லது பகற்கனவுகளை வளர்த்துக்கொண்டு அவைகளை அடைவதுதான் வாழ்வின் கதி என்று வாழ்பவர்கள். அவைகளை அடைவதற்காக எதையும் பலியிடத் தயாராயிருப்பவர்கள். (carried away by ambitions) இவர்கள் ஒருபோதும் வாழ்வை வாழ்வதுமில்லை; அனுபவிப்பதுமில்லை என்று சொரென் கீர்க்கெகாட் கூறுவார்.

அவரைப் பொறுத்தமட்டில் இந்த முதற் சாராரின் இருப்பு உறுதியற்ற இருப்பு. (loose sense of existence )

இரண்டாவது வகை மனிதர்கள் பின்வாங்கி ஓடுபவர்கள். தமது இருப்பு தமக்களித்த வாழ்வை எதிர்கொள்ள அஞ்சுபவர்கள். இவர்களது வாழ்வு சில வேளைகளில் தற்கொலையில் கூட முடியலாம்; பல வேளைகளில் ஓர் இழுபட்ட இருப்பாக (dragging sense of existence) அமைந்திருக்கும். "ஏதோ பிறந்துவிட்டோம் வாழ்ந்து முடிப்போம்" என்பதே இவர்களது அன்றாட உச்சாடனமாயிருக்கும்.

இந்த இரண்டு வகையான விரும்பத்தகாத வாழ்க்கை நிலை கொண்டு இருப்பவர்களை விடுத்து நடுநிலை கொண்ட மூன்றாவது வகை மனிதர்களையும் கீர்க்கெகாட் கனவு காண்டார். இவர்கள் எண்ணிக்கையில் சிலரே. ஆனாலும் "வெற்றி வேண்டுமா போட்டுப்பாரடா எதிர் நீச்சல்" என்று வாழ்க்கைப் போராட்டத்தில் குதித்தவர்கள். இவர்களையே கீர்க்கெகாட் நம்பிக்கை வாதிகள் (believers) என்றும், இருட்டினில் குதிப்பவர்கள் (leaping into darkness) என்றும் அழைப்பார்.

இன்றைய எமது ஈழச் சமூகத்தில் சுயபுத்தியை அவமதித்து பிரபல்யங்களை அப்படியே பின்பற்றுபவர்களும், புகழ்பெறக்கூடிய செல்நெறிகளை (trends) கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுவோரும், பகற்கனவுகளை வளர்த்துக் கொண்டு பெறுமதி மிக்க நிகழ்கால வாழ்வை இழப்பவர்களும் ஏராளம். இன்னும் சிலர் வாழ்க்கையை பெருஞ் சுமையாக எடுத்து இழுபட்ட சீவியமாக மாற்றி வாழ்க்கையை வாழாது, வாழ்க்கையால் இழுத்துச் செல்லப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அன்புள்ள வாசகனே! வாசகியே! உனது நிலை எங்கே? உனது இருப்பு நிலை உனக்கு ஒளியூட்டப்பட்டுக் காட்டப்பட்டுள்ளதா? கீர்க்கெகாட் சுட்டிக்காட்டும் "போராடும் வாழ்க்கை நிலைக்கு" நீ தயாரா? மனித வாழ்வின் போராட்டங்களுக்கு என்றும் தெம்பு தருவதே மெய்யியலின் இயல்பாகும்.

யோ. போல் றொகான்

- உன் உணர்ச்சியை ஆளத்தெரியாவிட்டால் உன்னை அது ஆட்சி செய்யும்.
- பயத்துடன் வாழ்ந்து செத்து மடிவதை விட துணிவுடன் மடிந்து புகழடைவதே மேல்.

நன்றி : மலரும் பருவம்

From the Editor:

# To Be and To Escape

## Assimilating the Existentialism of Soren Kierkegaard

Life is the basic and fine manifestation of existence. The slogan "Life is to be lived" surfaced in contemporary existentialism. At the same time post war existentialists depict life as a continuous struggle. Life is not for all those who are born but it is for those who are ready to accept the challenges.

According to Soren Kierkegaard, men and women who accept the challenges of life are those who have realized the meaning of human existence. In his own life he experienced many challenges and his existentialism is the result of these struggles of life.

For him there are people who are leading a loose sense of existence. They have not yet realized the real meaning of the human existence. They cannot stand up for their own convictions and ideals. They are carried away by the heroes who are popular or by the famous trends or by their own ambitions. Those who are in the loose sense of existence never live their life in its fullness.

There are some others who are leading a dragging sense of existence. These men and women are cowards who withdraw in the face of the struggles of life. They are also escapists many a times.

Besides these two categories, Soren Kierkegaard had a dream about a third category of people who are a few in number. These are the realists and ready to accept the struggles of life. He calls these as the 'believers' or 'those who leap into darkness'. He invites men and women to live the life to its fullness by accepting all the ups and downs instead of running away from life.

Dear reader! Where do you stand in these categories of life? Are you ready for the 'combating life' which Soren Kierkegaard points out? The nature of philosophy is to give strength to face the challenges of human existence.

**J.Paul Rohan**

# அகத்தின் அழகு முகத்தில் தெரியும் - நுண்ணிய மன உணர்வுகளின் அறவியல்:

## ஒரு மெய்யியல் உசாவல்

- சா. பி. கிருபானந்தன்

20ம் நூற்றாண்டு வரலாற்றில் மிக மோசமான மனித அழிவுகளைச் சந்தித்தது. 21ம் நூற்றாண்டு நம்பிக்கையைத் தரும் என எதிர்வு கூறமுடியாது. போர் தொடர்கிறது. அழிவின் ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படுவதுடன் அதை பரீட்சிக்கும் களங்களாக மூன்றாம் உலகத்தில் மோதல்கள் தூண்டப்படுகின்றன. பேரழிவுதரும் ஆயுத உற்பத்தியும் பாவனையும் மக்களையே பெருமெடுப்பில் காவு கொள்ளுகின்றன. 75வீதத்திற்கு மேற்பட்ட மானிடம் உலகக் கடனாலும் பட்டினியாலும் மெதுவாகச் சாகடிக்கப்படுகிறனர். பசி, வறுமை, அறியாமை, சுகாதாரமற்ற குடிநீர், இல்லிடமற்றதன்மை, மற்றும் வேலையின்மையால் மானிடம் தன் முகத்தை இழக்கிறது. கோளமயமாதல் முகமற்ற மூன்றாம் உலகை உருவாக்கும் ஒரு அரசியல் தந்திரமேயாகும். இன்னும் அமைப்புரீதியான சாதிவேறுபாடு, இனவேறுபாடு கொள்கை வேறுபாடு மனித முகத்தை சிதைக்கும் யாதார்த்தமாகும். மற்றைய உயிரிகளைப்போல மனிதன் தன்னை போன்ற அதே உயிரியை ஓரங்கட்டியதுடன் அழித்தும் உள்ளதை "மனித நாகரிகம்" என வரலாறாக பதியப்பட்டுள்ளது. அதனால் வரலாறு என்பது வெற்றியடைந்தவர்களின் வரலாறாகவே கருதப்படுகின்றது.

### மனித மையம்

ஆறிவு, ஆளுகை (Intellect & Will) என்னும் இரு புலத்தைக் கொண்டுள்ளதால் மனிதன் மற்ற உயிரிகளை விட தனித்துவமான தன்மையை பெற்றுள்ள உயிரி எனலாம். ஒவ்வொரு மனிதரின் அறிவுத்தேடல் அவ் உயிரியின் வரையறைத்தன்மையாகும். ஒவ்வொரு மனித உயிரியும் தனியன் என்பதை கொண்டாலும் இருப்பியலின் எல்லாக் கட்டத்திலும் மற்றவரோடு தொடர்பை பேணல் வேண்டும். மற்ற ஆள் சமூக சமஇருப்பியலுக்கு இயலாதவர் என கூறப்பட்டு முழுமையான தனியன் கருத்தியலும் தனி ஆள் சுய சுதந்திரம் மேலோங்க மற்றவர் தனது சுயாதிபத்தியத்துக்கு வேண்டாப்படாதவர் என்ற கருத்து பரவலாகத்தொடங்கியது. "நான் சிந்திக்கிறேன் நான் இருக்கிறேன்" என்ற தெக்கார்த்தின் வரையறை புதிய சிந்தனை மாற்றத்தை உருவாக்கியது. அப் புதிய சிந்தனை மத நம்பிக்கைகளை அறிவு என்ற போக்கோடு பிரதியீடு செய்தது. அதன்

பிரகடனம் அறிவில் முற்றுமுழுதான சரணம். இப்போது உண்மையான உலகம் என்பது அறிந்துகொள்ளக்கூடிய உலகமே. இதனால் அறிவுவாதம் முன்வைக்கப்பட்டு தனி மனித சிந்தனை இருப்பியலில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. யேர்மன் சிந்தனையாளரான இம்வனுவேல் கான்ட் தனிமனித இருப்பை, அறிவுவாதத்தை உச்சப்படுத்தியதை அவதானிக்கலாம். "நான் இருக்கிறேன்" என்ற ஆதாரத்தை தெக்கார்த் பார்க்காமல் நான் சிந்திக்கிறேன் என்ற என்று கூறியது பொருத்தப்பாடாகத் தெரியவில்லை என்று "சிந்தனை நிகழ்வியல்"[1] மெய்யிலாளர் ஹீசேர்ல் குறிப்பிட்டார். இவருடைய சிந்தனை இருத்தலியல் மெய்யியலாக பிரான்ஸில் உருவாகத்தொடங்கியது. ஐரோப்பாவில் இரண்டாவது உலகயுத்தம் மனித நாகரிகத்தின் இருப்பையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

## "நரகம் மற்றைய ஆள்"

இறைத்தன்மையையும் ஆள்தன்மையையும் தனது இருப்பின் சாரமாகக் கொண்டுள்ள மற்றவர் இவ்வகை போக்கில் ஒரு விதத்தில் தவிர்க்கப்படவேண்டியவர் என இருத்தலியலின் எதிர்வாத குறுகியதன்மை மேலாங்கியது. யோனாஸ் இப்போக்கை "எதிர் மறையான குறுகியதனம்" என வர்ணிக்கிறார். மேலும் அவர் குறிப்பிடுகையில் ஒவ்வொரு தனி ஆளும் தனியாக உள்ளதாலும் மற்றவர்களின் சுதந்திரத்தை கைப்பற்றுவதாலும் சார்த்ரே கருதுவது போல ஒருவராலும் தாங்கமுடியாது வாழ்க்கைக்குள் பின்தள்ளபடுவதாகவேமுடியும். மற்றவர்களோடு இணைந்த வாழ்வின் சூழலின் எதிர்மறைப்போக்கு "நரகம் மற்றைய ஆள்" என்ற கருத்தை இருத்தலியல்வாதி சார்த்ரே முன்வைத்தார். இதில் இன்னும் ஒருபடி சென்று "கடவுள் இறந்துவிட்டார் நாங்கள் அவரைப் புதைத்துவிட்டோம்" என நீட்சே போர் பிரகடனம் செய்தார். இச் சிந்தனை அரசியல் கிட்லரின் பாசிசமாக கிளர்ந்தது. "கடவுள் இறந்துவிட்டார் நாங்கள் அவரைக் கொன்று விட்டோம்" என நீட்சே செய்த போர்ப் பிரகடனத்துக்கு டொஸ்ரோவக்ஸி பின்வருமாறு சொன்னார் "கடவுள் இறந்துவிட்டால் எதுவும் உத்தரவாதம் பெற்றுவிடும்." இதன் அறவியல் பின்விளைவை பின்னர் சந்தித்தோம். நீட்சே சொன்ன "மா மனிதன்"[2] மா யேர்மானியனாக என்ற ஆரியவாதச் சிந்தனைப் போக்காக கிளர்ந்தது.

---

[1] தோற்றப்பாட்டியல் என்றும் அழைக்கலாம்

[2] அதீத மனிதன் என்ற நீட்சேயின் கோட்பாடு

## நான் - நீர்

இருத்தலிய எதிர்மறை குறுகியத்தனம் பல இருத்தலிய சிந்தனையாளர்களை சூன்யவாதத்கு இட்டுச்சென்றது. இதனால் ஏக்கம், இல்லாமை மாயை போன்ற சிந்தனைகள் இழையோடியது. யூத இருப்பியல் சிந்தனையாளரான மாட்டின் பியபர் என்ற யேர்மனிய மெய்யியலாளர் மனிதத்தின் தனியன் தன்மையை ஏற்றுக்கொண்டு அதே நேரத்தில் தனியான மனிதன் தொடர்புகளை உருவாக்கக் கூடியவன் என்ற இருப்பியல்வாதத்துவ போக்கின் புதிய திருப்பமாக இக் கருத்தை முன்வைத்துள்ளார். நீவிர் – யான், அது– நான் ஏற்படும் உரையாடல், தனியான இருப்புக்கு வருவதற்கு, உறவுக்குள் புகும் அதே செயலால் மட்டுமே முடியும் என்பதை வலியுறுத்துகிறார். நான் – நீவிர் என்ற உறவுமுறை இரு மனிதத்தன்மை உடையவர்களோடு மட்டும் உருவாகலாம். நான் – அது என்னும் உறவு மனிதன் பொருள் தன்மையான உறவு. இவ்விரண்டு சூழலிலும் நான் என்ற வரையறை மாற்றமுறும்.

## முகம் - அறவியல் பரிமாணம்

மனிதன் உலகில் இன்னுமொரு உயிரி எனப்படினும் உலகை பிரக்ஞைபூர்வமான தோற்றப்பாட்டால் தன்னை பார்க்ககூடியதனால் மனிதத்தின் தனித்தன்மையை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் தனிமனிதன் உலகின் ஒரு பகுதி என்பதையும் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். விலகிய போக்கில் தனிமனிதன் தன்னை பிரக்ஞைபூர்வ தோற்றப்பாட்டால் தன்னை நிச்சயப்படுத்த முடியாது. மனிதன் பிரக்ஞைபூர்வமாக தன் சுயத்தை உணரும் கருத்து நிலைப்பாடு மற்ற மனிதத்தோடு உறவின் போதுதான் தான் மனிதன் என்ற தோற்றப்பாடு ஏற்படும்.

ஒரு ஆளை மற்ற ஆளிலிருந்து வேறுபடுத்துவது மனித முகமே. அதனால் முகம் மனிதத்துக்கு சடப்பொருள்தன்மையோடு ஆள்தன்மையை தருகிறது. ஒரு முகம் மற்ற மனிதனின் சடப்பொருள் தன்மையை வரையறுப்பதுடன் இதனை யாதார்த்தமாக்குகின்றது. ஆன்மா என்பது உடலில் யதார்த்தப்படவேண்டும். இதனால் ஒவ்வொரு மனிதனும் யதார்த்தமான ஆள். மற்றைய மனிதரோடு தொடர்பு செயற்பாடுகளில்தான் அறிவியற்பரிமாணம் உருவாகும். ஆள் என்னும் கேள்வியின் தேடல் சுயதன்மையில் அதே ஆள் தன்மையில் இயல்பானநிலையில் உருவாகமுடியாது – மற்றவராலேயே ஏற்படுத்தப்படமுடியும். மற்றவரின் அறிவியியற் பிரசன்னத்தால் இந்தத் தேடலை நாம் கேள்விக்குள்ளாக்குகின்றோம். மற்றவரது அந்நியத்தனம் எனது

எண்ணத்துக்கு, இருப்புக்கு குறைக்கப்படும் போது இது குறிப்பாக நிறைவுபடுவதால் எனது இயல்பு அறவியல்போல தேடுதலுக்குள்ளாகிறது என லெவினாஸ் குறிப்பிடுகின்றார்.

லெவினாஸ் மற்றவரின் தோற்றப்பாட்டை யதார்த்தப்படுத்தும்போது முகத்தோடு முகம் என்று விளங்கப்படுத்தினார். இவ்வகை முகத்தோடு முகம் நிலைப்பாடு பொறுப்புணர்வை தூண்டுகிறது. இது எப்போதும் தனிமனித முயற்சியே. முகத்தோடு முகம் என்று பேசப்படும் போது தனிமனிதனின் செயலை அது வெளிப்படுத்துகிறது. இவ்வகை முகத்தோடு முகம் நிலைப்பாடு பொறுப்புணர்வை தூண்டுகிறது முகம் மற்றவரின்உடலியல் தன்மையை எடுத்துக்காட்டும். மற்றவரின் சதை யதார்த்தத்தை எடுத்துக்காட்டுகிறது. அகத்தின் நுண்ணிய உணர்வுகள் முகத்தில் பிரதிபலிக்கின்றன.

மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து (குறள் 90)

துணைநின்றவைகள்:


1. Jonas, "Communion The Ontological Consequential of the Individual" in The Divine Shepherd's Voice, 2(April – June) 2, 2004, Pg. 75
2. Antont F. Beavers, "Emmanuel Levinasi The Prophetic Voice to post – modernity" (From the web)


★ எப்படிப்பட்ட கஸ்டத்தை அடைந்தாலும் மனதை நினைத்த நேரத்தில் நினைத்த இடத்தில் ஒருமுகப்படுத்துபவர் எவரோ அவர் சர்வ வல்லமை பெற்றவராக விளங்குவார்.

**- சாள்ஸ் எட்வின்**

★ நம்மை நாமே அறிந்து கொள்வதற்கு துன்பந்தான் சாதகமாக இருக்கின்றது. நாம் மிகவும் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் சமயத்தில்தான் ஏதோ நிரந்தரமாய் மூடியிருந்த கதவுகள் திறந்து வெளிச்சம் பளிரென அடிப்பது போல் தோன்றும்

**- விவேகானந்தர்**

# ஆய்விற்கு ஒரு அறிமுகம்

- கேமமாலினி கணபதிப்பிள்ளை

ஆய்வு என்பது எந்த துறையை எடுத்துக்கொண்டாலும் ஊடுருவி காணப்படும் ஒன்றாக உள்ளதுடன் இன்றைய அறிவியல் உலகில் தவிர்க்க முடியாத ஒன்றாகவும் ஆகிவிட்டது. பாடசாலை மாணவர் தொடக்கம் உயர்பட்டப் படிப்பு வரை ஆய்வு நடைபெற்ற வண்ணமே உள்ளது. எந்த பொருளை நாம் தேர்ந்தெடுப்பினும் ஆய்வின் செல்வாக்கு இருப்பதை மறுக்க முடியாது.

ஆய்வு என்பதற்கு பெருமுயற்சி, அர்ப்பணம், திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி, கடுமையான உழைப்பு என்ற சொற்கள் பொருளாகிறது. ஒரு விடயத்தில் ஆய்வு செய்வதற்கு பெரு முயற்சி தேவை. ஒன்றைப்பற்றி மூழ்கின்ற போதுதான் அதை ஆய்வு செய்யலாம். விடயம் அறியாது ஆய்வு நடைபெற சாத்தியமில்லை. முன்பு ஆண் பெண்ணை காதலிக்க அல்லது திருமணம் செய்வதற்கு மாத்திரமே ஆய்வு பயன்பட்டது. பின் 'Re' என்ற முன் சொல் மீள ஆய்தல் என அறிவு நிலையில் உண்மையை கூறவேண்டும் என்பதை ஆய்வு எனக் கூறும் நிலை ஏற்பட்டதென Writing 'Research papers' எனும் நூலில் Melissia Walker கூறுகிறார்.

ஆய்வு பற்றி பலவித விளக்கங்கள் கூறப்படுகின்றன. ஏதேனும் ஒன்றை மிக்க கவனத்தோடும் விடாமுயற்சியோடும் நுட்பமாய் தேடுவது எனவும் குறிக்கின்றார். "Research" எனும் சொல் பிரஞ்சு மொழிச் சொல்லான "Recercher" என்பதன் வழிப்பட்டது. இதற்கு தேடுதல் என்று பொருள். ஒன்றைப்பற்றி மிக அணுக்கமாகவும் நுணுக்கமாகவும் தேடும் திறனை இது குறிக்கின்றது. உண்மையாக தேடும் திறனை இது குறிக்கின்றது. உண்மையைக் கண்டறிய உந்துகின்ற நாட்டமே ஆய்வாக மலர்கிறது. குறிப்பாக எப்பொருளை பற்றியும் அதன் மெய்மையையும் தன்மையையும் கண்டறிய நன்கு பயிற்சி பெற்ற அறிவியல் முறையில் புலனாய்வு செய்வதென விளக்கலாம். தமிழில் ஆய்வு என்பது 'ஆய்தல்' என்ற உரிச்சொல்லுக்கு 'உள்ளதன் நுணுக்கம்' என்று பொருள் கூறுவார் தொல்காப்பியர். முன்பு உள்ளதை மேலும் மேலும் நுணுகுதலை ஆய்வு சுட்டுகிறது. வள்ளுவரும் 'ஆய்ந்து ஆய்ந்து கொள்ளாதான் கேண்மை' என நண்பர்களை மேலும் மேலும் நுட்பமாய் தேடுதலை இது சுட்டுகிறது. மேலும் ஆய்விற்கு அழகு, அகலம், நுட்பம், வருத்தம் எனவும் பொருள் கூறப்படும். உற்று கவனிப்பது, சேர்ந்து தெளிதல், பார்த்தல் போன்ற உண்மையை கண்டறிய வழிகோலும் என விளக்கமளிக்கப்படுகிறது. நடைமுறையிற் கூட 'கீரையை ஆய்தல்' என பேசுகின்றோம். ஒட்டு மொத்தமாக ஆய்வு என்பது கடந்தகால or நிகழ்கால or எதிர்கால நிகழ்ச்சி பற்றியதாகவோ விதிகள் பற்றியதாகவோ or குணங்கள் or பண்புகள் பற்றியதாகவோ காணப்படும் தேவைப்படும் மெய்மையை அறியும் முயற்சியே ஆய்வாகும்.

ஆய்வானது சில நோக்கத்தை தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. மெய்யியல் குறிக்கோள் அற்ற நோக்கல் குருட்டுத் தன்மையானது என 'Carnap' கூறியது போல எதற்கும் நோக்கம் இருக்க வேண்டும். அவ்வகையில் ஆய்வும் உண்மையைக் கண்டறிய or மாற்றங்களுக்கு சிறந்த வழிமுறையைக் காட்ட, புதிய அறிவைப் படைக்க, அறியா பொருளை அறிய துணியவும் மறைந்த உண்மையை கண்டறிய or மாற்றங்களுக்கு சிறந்த வழிமுறைகளைக் காட்ட, புதிய அறிவைப் படைக்க, அறியாப்பொருளை அறிய துணியவும் மறைந்த உண்மையை கண்டறியவும், பிரச்சினைகளும் தீர்வுகளும் சார்ந்த புதிய புலக்காட்சியை ஏற்படுத்தவும், புதிய விபரிப்பை முன்மொழியவும், தொடர்புகள் அல்தொடர்பை பிரித்தறியவும், மாறிகளுக்கிடையில் இணக்க அல்இணக்கத்தைக் காணவும் எண்ணக்கோள்களை பரீட்சிக்கவும் புலமை பயிற்சி சுவையை காணவும் புதிய எண்ணக்கரு கோட்பாடுகளை விதிகளை நிறுவவும் புதிய தீர்மானம் எடுக்கவும் ஆய்வின் பெருண்மையை நிலைநாட்டவும் அறிவின் செயற்பாடுகள் தொடர்பான திறமையை முன்னெடுக்கவும் என பல நோக்கங்களை தன்னகத்தே கொண்டது.

ஆய்வு எனும் வகையில் இது இவ்வாறுதான் இருக்குமென சில பண்புகள், இயல்புகள் வரையறுக்கப்படலாம். அதாவது குறிக்கோள் வரையறுக்கப்பட்டதாகவும் போதுமான தகவல் தரவுகளை திரட்டியதாகவும் பொருத்தமான முறையியலை பயன்படுத்தியதாகவும் நன்கு திட்டமிடப்பட்டதாக புறவய அணுகுமுறைகளையும் பக்கம் சாராதும் முற்சாய்வு கொள்ளாததுமான பண்புகளை உள்ளடக்கியிருக்கும். போதுமான தூரம் பொருத்தமானதுமான தரவுகளிலிருந்தே முடிவை அண்மித்ததாயும் முன்னர் ஒளிவீசா தரிசனம் மீது ஒளிவீசப்பட்டதாயும் ஆய்வு தருக்க தெளிவுடையதாயும் இருப்பதுடன் மொழி, செறிவுமொழி, கட்டுமானம், முதலியவற்றை கொண்டதுடன் ஆய்வின் சமர்ப்பணம் செவ்விதாகவும் அமைந்திருக்கும். ஆய்வில் வசதியைத் தேடும் நாட்டமின்றி இயற்கையின் முருகியல் இன்பமும் இருப்பதுடன் புதியவற்றை கண்டறியவும் மகிழ்ச்சியும் உண்டு. ஆய்வின் இயல்புகள் துறைகளுக்கேற்ப வேறுபடலாம். சமயத்துறையில் அதன் பரப்பும் விஞ்ஞான துறையில் அதன் பரப்பும் வெவ்வேறானவை.

ஆய்வின் வகைபற்றி கூறினால் அறிவியலாய்வு, இலக்கிய ஆய்வு என வகைப்படுத்தலாம். செயன்முறை ஆய்வு, பகுப்பாய்வு எனவும் வகுக்கலாம். செயன்முறை ஆய்வு தாமே மெய்மையை நேரடியாக கண்டு தொகுத்து முடிவிற்கு வருவதாயும் பகுப்பாய்விற்கு முன்பேயுள்ள மெய்மைகளை வைத்து கொண்டு முடிவு காணுவதுமாக இருக்கும் அறிவியலாய்வு இரண்டு வகைப்படும். அடிப்படை ஆய்வு, பயன்பாட்டாய்வு. அணுவை பிளக்கலாம் என்பது அடிப்படை ஆய்வே. விண்வெளி கலமும் அணுகுண்டும் கண்டது பயன்பாட்டாய்வு. இலக்கிய ஆய்விலும் முதன்மை ஆய்வு, துணைமை ஆய்வு என பகுக்கலாம். பகுப்பாய்வு முறையே இன்று பெரும்பாலும் ஆய்வு நடைபெற உதவுகிறது.

மேலும் வரலாற்றியல் ஆய்வு, ஒப்பியல் ஆய்வு, செயற்தொகுதி ஆய்வு, செயற்தொகுதி ஆய்வு, புள்ளி விபரவியல் ஆய்வு, களஆய்வு என வகைப்படுத்தலாம்.

ஆய்வினை செய்ய எமக்கு முதுகெலும்பாக உள்ளவை ஆய்வு முறைமைகள். இயற்கை விஞ்ஞானத்தில் அவதானம், பரிசோதனை, உய்த்தறி, தொகுத்தறிவும் சமூக விஞ்ஞானத்தில் புள்ளிவிபரவியல் முறை, தனியாள் ஆய்வுமுறை, வினாக்கொத்து, பேட்டி, கட்டுப்பாட்டுகுழு முறை என வகுக்கலாம்.

ஆய்வின் வளர்ச்சியானது தற்போது உயர்ந்து காணப்படுகிறது. முன்பு தர்க்கமுறை என இருந்து பின் விஞ்ஞானமுறை அமைப்புமுறை எனவளர்ந்து வருகிறது. கிரேக்க இந்திய நாகரீகங்கள் வாத அடிப்படை உண்மையை நிலைநிறுத்தவும் பின்பு கலிலியோவுடன் விஞ்ஞானமுறை அமையாது. விஞ்ஞானத்திலிருந்து வளர்ச்சி பெற்ற ஆய்வே அமைப்புமுறை.

ஆய்வின் முக்கியத்துவம் சகல துறையிலும் காணப்படுவதுடன் தீர்வு காணவும் பயன்படும். சோக்கிரட்டீஸ் கூறியது போல 'ஏன் ஏன்' என்ற வினாவை கேட்க கேட்க ஓர் தெளிந்த விடை கிடைப்பது போலவே எதையும் முடிந்த முடிவாக ஏற்காது "பொப்பர்" கூறியதை போல் "ஐயமற்ற உண்மை என எதுவுமில்லை அனைத்தும் திருப்திகரமான விளக்கமே" என்பது ஏற்புடையது. அறிவு வளர வளர ஆய்வும் வளர்ந்தே செல்லும். கேள்வி கேட்டு பதில் வரும் பின் பதிலானது கேள்வி கேட்க வைக்கும்.

இன்றைய உலகில் ஆய்வு மூலை முடுக்கெங்கும் இடம்பெறுகிறது. பலவித கருவிகளில் இன்று ஆய்வு இடம்பெறுவதுடன் ஆய்வு நிச்சயமான முடிவை தந்துவிடுமென கூறமுடியாது. கருவிகளின் குறைபாடு, புலன்களின் அவதானமின்மை போன்றவற்றால் ஆய்வில் பிரச்சினை இடம்பெறலாம். ஆனாலும் கூட மனிதன் அவசியமான ஒன்றைவிட்டு விலகி நிற்க முடியாது. அதனால் ஆய்வு செய்வதே நன்று.

Reference


1. Writing Research papers, Melisia Walker W.W.Norlon & Company, New York. London, 1984.
2. ஆய்வியல் அறிமுகம் Dr. தமிழண்ணல், Dr. M. S. இலக்குமணன், ஏரக வெளியீடு, சதாசிவநன் மதுரை, 1979.
3. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி – 2, தமிழ்ப் பல்கலைக்கழகம், பக்கம் 533.
4. ஆய்வு முறையியல், சபா. ஜெயராஜா


★ தொடர்ந்த உழைப்பே, தொடர்ந்த முயற்சியே வெற்றி தரும்.

- கதே

# இருட்டினிலே குருட்டாட்டம்

- சந்தேகி

என்ன? தலைப்பே குதர்க்கமாயுள்ளதா? மையிருட்டினிலே பார்வையுள்ளவரும் பார்வையற்றவரும் ஒரே நிலையில்தான். ஆனாலும் ஒரு வித்தியாசத்தையும் குறிப்பிடலாம். இருட்டினிலே பார்வையற்றவர் தடுமாற மாட்டார். ஏனெனில் இருள் அவருக்குப் பழக்கப் பட்டுவிட்டது. ஆனால் பார்வையுள்ளவர் தடுமாறுவார். எனவே இருட்டினிலே குருட்டாட்டம் போடுவோர் பார்வையுள்ளவரே; அல்லது தமக்கும் பார்வையுண்டு என்று பீற்றிக் கொள்பவரே.

இப்போது பார்வை என்ற சொல்லை உடல் சார்ந்த கண்ணின் தொழிற்பாடு என்ற நிலைப்பட்டை விடுத்து அதன் ஆழ்ந்த அர்த்தத்தில் எடுப்போம். ஆங்கிலத்தில் 'sight' 'vision' என்ற இரு சொற்களும் தமிழிலே பார்வை என்ற ஒரே சொல்லால் குறிப்பிடப்படலாம். sight என்பது உடற் கண்ணின் பார்க்கும் செயற்பாட்டைக் குறிக்க vision என்பது ஆழ்ந்த உள் நோக்குதலையும், தரிசன வீச்சையும் குறிக்கும். முன்னையது உடலியல் சார்ந்தது. பின்னையது மெய்யியல் சார்ந்தது.

உடலியல் சார்ந்த பார்வையைப் பொறுத்த மட்டில் மானிடம் முன்னேறி விட்டது. பார்வைக் கோளாறுகள் மிக நுட்பமான முறைகளில் சீர்செய்யப்படுகின்றன. கருவினிலே வளரும் குழந்தைக்குக் கூட பரம்பரையாக வரக்கூடிய பார்வைக் கோளாறுகளை நீக்கவல்லதாக மரபணு ஆய்வுகள் முன்னேற்றம் கண்டுள்ளன. ஏன் விலங்குகளது பார்வைக் கோளாறுகளை நீக்கும் மூக்குக் கண்ணாடிகளும், தொடுகை ஆடிகளும் (contact lens) மற்றும் கருவிகளும் இன்று மலிந்து விட்டன.

ஆனால் உடலியல் பார்வையை விட்டு மற்றைய மானுடப் பார்வைக்கு வந்தால்... பரிதாபமான நிலை. மானுடத்தின் பார்வை என்னாச்சு? தரிசன வீச்சுக்கள் எங்கே? தொலை நோக்குகள் பெரும்பாலும் குறைபாடாகி விட்டன. மானுடத்தின் இந்தப் பார்வை மங்கித்தான் போச்சு.

எதிர்காலத்தைத் தீர்க்க தரிசனக் கண்கொண்டு நோக்காதவர்களும், எந்த விடயத்தைப் பற்றியும் தொலை நோக்கு அற்றவர்களும் பன்றிகளைப் போன்றவர்கள் என்றார் சோக்கிறட்டீஸ். பன்றிகளைப் பாருங்கள் அரை அடிக்கு மேல் தலை நிமிர்த்த முடியாத விலங்குகள். தம்மைச் சுற்றிய மிக அண்மிய சுற்றுவட்டத்துள் உள்ள இரைகளே அவைகளது தேடல் வீச்சின் இலக்கு. "நான் இன்று உண்டு, குடித்து, புணர்ந்து, இன்பமாய் இருந்து, புகழைச்

சேர்த்து, பிரபல்யமடைந்து, இன்று எந்தப் பிரச்சினையும் வராமல் சமாளித்து" - இப்படி குறுகிய வட்டத்துள் முடங்கிக் கிடக்கும் மானுடர்களே பன்றிகளின் மூலமாக உருவகிக்கப்பட்டவர்கள்.

ஆம். மானிடர் தம் பார்வையை இழந்து விட்டனர். தரிசன வீச்சுக்கள், தொலை நோக்குகள், எதிர்கால சந்ததி பற்றிய பிரக்ஞை, நாளைய தலைமுறை பற்றிய அக்கறை, எதிர்கால வரலாற்றைச் செவ்வனே சுட்டும் ஓர்மம் எல்லாமே அருகி விட்டன. பெரும்பாலான அரசியல், சமய, சமூக, நிறுவனத் தலைமைகளிடத்தில் இந்தத் தொலை நோக்கு, தரிசன வீச்சு அருகிப் போனமை பரிதாபத்துக்குரியதே.

பார்வை வேண்டும். புதுப் பார்வை பெற வேண்டும்.

* * *

பெரு நாட்டு மக்களிடையே நிலவி வருகின்ற ஒரு புராணக் கதை: பதினான்கு தலை முறைகளுக்கு முன்பாக ஒரு குறிப்பிட்ட குலத்தைச் சேர்ந்த சில குடும்பங்கள் சாதாரண சமூகச் சூழ்நிலைகளில் இருந்து பின்வாங்கி அன்டீஸ் மலைப்பகுதிகளில் உள்ள ஒரு பள்ளத்தாக்கில் வசிக்கத் தொடங்கினர். இவ்விடம் ஏனைய மக்கள் வாழும் இடங்களில் இருந்து வெகு தொலைவில் இருந்தமையால் முற்று முழுதாக தனிமைப்படுத்தப்பட்ட வாழ்வை வாழ்ந்தனர். இவ்வாறான தனிமைப் படுத்தப்பட்ட வாழ்வினாலும், பள்ளத்தாக்கில் நிலவிய நீடித்த இருண்ட சூழ்நிலையாலும், மற்றும் இங்கே பரவிய ஒருவித தொற்று நோயினாலும் இம்மக்கள் நாளடைவில் தம் பார்க்கும் சக்தியை இழக்கத் தொடங்கினர். தலைமுறைகள் கடந்தன. ஈற்றில் முற்று முழுதாக பார்வையற்ற ஒரு தலைமுறை உருவாகியது. ஆனாலும் பார்க்கும் சக்தியை ஈடுசெய்யக்கூடிய வகையில் அவர்களது ஏனைய புலன்கள் விருத்தியடைந்தன. இதனால் இவர்களது வாழ்வு ஏதோ ஒருவகையில் தொடர்ந்தது. அவர்களது கேட்கும், முகரும், சுவைக்கும் மற்றும் தொட்டுணரும் சக்திகள் ஏனைய இடங்களில் வாழ்ந்திருக்கக் கூடிய மக்களினுடையதை விட மேலோங்கியிருந்தது. இதனால் அவர்கள் திருப்தியோடு வாழ முடிந்தது.

இம்மக்கள் கூட்டத்தின் திருப்தியான வாழ்வுக்கு ஒரு அச்சுறுத்தல் தோன்றியது. இம்மக்களின் புலப்பெயர்வின் பின் அவர்கள் பெற்றுக்கொண்ட புதிய வாழ்க்கை முறையின் பல தலைமுறைகள் கடந்தன. ஒருநாள் அன்டீஸ் மலைத்தொடர்களில் ஆய்வில் ஈடுபட்ட ஒரு தனித்த இளம் ஆய்வாளன் இம் மக்கள் கூட்டத்தை வந்தடைந்தான். அம்மக்களது பார்வையற்று வாழும், ஆனால் சூழ்நிலைக்கு இயைபாக்கப்பட்டு வாழும் வாழ்க்கை நிலையைக் கண்டு வியந்தான். அவன் தனது ஆய்வை முடித்துக்கொண்டு

திரும்பவேண்டிய காலம் வந்தது. ஆனால் அம்மக்களுக்கு உண்மை நிலையை உணர்த்தி பார்வையுள்ள வாழ்வின் மேன்மைக்கு அவர்களையும் இட்டுச் செல்லவேண்டியது தனது தார்மீகப் பொறுப்பு என நினைத்தான். எனவே அவர்களுக்கு பார்வையுள்ள வாழ்வின் மேன்மைகளை விளக்கிக் கூறினான். ஆனால் அம்மக்கள் அவன் கூறியவைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. பார்வையுள்ள வாழ்வின் மேலான நன்மைகளை விளக்க அவன் வைத்த போட்டிகளில் எல்லாம் அவன் தோல்வியே கண்டான்.

அம்மக்களில் சிலரை வட்டமாக நிறுத்தி தான் நடுவே நின்று கொண்டான். பின் தான் அவ்வட்டத்தில் இருந்து தப்பி வெளியே செல்வதை தடுக்குமாறு அவர்களைக் கேட்டான். ஆனால் அவனால் தப்பிக்க முடியவில்லை. எந்த மூலைக்குப் போனாலும் அங்கேயுள்ளவர்கள் தம் கைகளை நீட்டி அவனைப் பிடித்து நடுவிலே தள்ளிவிட்டார்கள். ஏனெனில் அவர்களுக்குத்தான் செவிப்புலன் அதீத சக்தியைக் கொண்டிருந்ததே? எனவே அவனது காலடிச் சத்தத்தைக் கேட்டும், இதயத் துடிப்புச் சத்தத்தைக் கேட்டும் அவன் செல்லும் திசையைக் கண்டுபிடித்து விட்டார்கள்.

மற்றொரு முறை மரங்களின் கீழ் விழுந்து கிடந்த பழுத்த பழங்களைத் தேர்ந்தெடுக்கும் போட்டியிலும் மக்களே வெற்றி பெற்றார்கள். ஏனெனில் கண்ணால் பார்த்து பழுத்த பழங்களைத் தெரிவதை விட தொடுகையும், முகர்தலும் அதீதமாகவிருந்த அம்மக்களால் மிக விரைவாக, அதிகமான, தரமான பழங்களைச் சேகரிக்க முடிந்தது. எனவே அம்மக்கள் பார்வையற்ற தன்மை ஒரு மேலாண்மையென்றும், பார்வையுள்ளது ஒரு குறைபாடு என்றும் அம் மனிதனுக்குப் புரியவைக்க முயன்றார்கள். ஈற்றில் பார்வையற்ற அம்மக்களினால் பார்வையுள்ள அம்மனிதன் ஊனமுள்ளவனாகவும், குறைபாடுள்ளவனாகவும் கணிக்கப்பட்டான்.

இதற்கிடையில் அம்மனிதனுக்கும் அம்மக்கள் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கும் காதல் அரும்பியது. காதல் தான் கண்ணை மறைக்குமே! பார்வையுள்ள அம்மனிதனும் காதலில் குருடனானான். அவளையே திருமணம் செய்து அங்கேயே தங்கிவிட எண்ணினான். இதற்கிடையில் பளிச்சிட்டது இன்னொரு எண்ணம். தான் முன்பு தோற்ற விடயத்தை – பார்வையின் மேன்மையை அம்மக்களுக்குப் புரியவைக்கும் தனது திட்டத்தை அப்பெண்ணை மணப்பதனால் வெற்றிபெறச் செய்யலாம் என்று எண்ணினான். அப்பெண்ணை மணந்து தனது நகரத்திற்குக் கூட்டிச்சென்று சிகிச்சையளித்து அவளது பார்வைக் கோளாறைச் சரி செய்து மீண்டும் அவ்விடத்திற்கே வந்து அவளின் மூலமாக பார்வையின் மேன்மையை அவளின் மக்களுக்கு நிரூபிக்கத் திட்டம் போட்டான். இப்படிப் பல எண்ணங்களோடு அவளிடம் தன் காதலைச் சொன்னான். ஆனால் அங்கும் அவனுக்கு ஒரு சவால் காத்திருந்தது.

அப்பெண்ணும் அவன்மீது மையல் கொண்டிருந்தாளாயினும், திருமணத்திற்கான சம்மதத்தை அவன் கேட்டபோது அவள் தனது சார்பான நிபந்தனைகளை வெளியிட்டாள். அப்பெண்ணின் மக்கள் கூட்டம் அம்மனிதனை ஒரு ஊனமுற்றவன்; நோயாளி என்றே கருதினர். எனவே அப் பெண் சொன்னாள்: "நோயாளியான உங்கள் பார்வையுள்ள நோய் இங்கே பரவ வாய்ப்புண்டு. எனவே எனது குழுமத்தில் வாழும் பெரியோரது கருத்துப்படி நீங்களும் என்னைப் போல பார்வையை இழந்தால் மட்டுமே எங்கள் திருமணக் கனவு நனவாகும். எம்மக்களிடையே உள்ள சிறந்த வல்லுனர்கள் உங்களைப் பார்வையை இழக்கச்செய்து இங்கேயுள்ள ஏனையோரைப் போல சாதாரண ஓர் ஆளாக மாற்றுவார்கள். இதற்கு நீங்கள் சம்மதிக்க வேண்டும்."

அவன் முன்னால் வைக்கப்பட்ட சவால் எதுவெனில் பார்வையற்ற தன்மையை சாதாரணம் என நினைக்கும் சமூகத்தில் வாழும் ஒருத்திக்காக பார்வையுள்ள சாதாரணனாகிய அவன் அவர்களைப் போல பார்வையற்ற சாதாரணனாக மாற வேண்டும்.

அன்றிரவெல்லாம் அவன் யோசித்தான். இரவில், பார்வையுள்ள தன்மையும், பார்வையற்ற தன்மையும் ஒன்றாக சங்கமமாகும் நேரத்தில் ஏற்கனவே காதல் வயப்பட்டதனால் கண்ணிழந்து போயிருந்த அவன், பரவசக் காதலுக்கும் - காதலிக்கும் அடிமைப்பட்டு தனது பார்வையை இழக்கின்ற சிகிச்சைக்கு உடன்பட முடிவு செய்தான். அடுத்த நாள் விடிந்ததும் இம் முடிவைத் தெரிவிப்பது என்ற உறுதிப்பாட்டுடன் உறங்கிவிட்டான்.

அடுத்த நாட்காலை சூரியனின் முதற் கதிர்கள் அப்பள்ளத்தாக்கை வந்தடைந்தன. சுயவிருப்பத்துடன் குருடாகும் தீர்மானத்துடன் துயிலெழுந்த அவன் கண்களுக்கு அப்பள்ளத்தாக்கு வர்ணக் கலவையில் தோய்த்தெடுத்த அற்புத ஓவியமாகத் தோன்றியது. மலைக்குன்றுகளும், புல்வெளிகளும், ஆறுகளும், பூக்களும், மரங்களும் இயற்கைக் கன்னி கண்களுக்கு விருந்தாக அள்ளி வழங்கும் தவிர்க்க முடியாத பரிசுகளாகத் தோன்றின. இவைகளைப் பார்த்து பிரமித்து நின்ற அம்மனிதன் தனது சிகிச்சையை நினைவு கூர்ந்து இவற்றிற்குப் பிரியாவிடை கூற முயன்றான். ஆனால் அவனால் முடியவில்லை. கண்களுக்கு விருந்தளிக்கும் அவ்வற்புதங்களை விட்டு குருடாவதா? அக்கணமே தனது பரவசக் காதல் என்ற குருட்டாட்டத்தில் இருந்து வெளிச்சத்திற்கு வந்தான். துயில் கலைந்து எழுந்தவன் போலானான். மறுகணம் தனது காதலியிடமிருந்தும், அந்தக் குருட்டு (இருட்டு) பள்ளத்தாக்கிலிருந்தும் தப்பித்து, ஒளியும், வர்ணஜாலங்களும் நிறைந்த தனது நாட்டை நோக்கி ஓடத் தொடங்கினான்.

* * *

இந்தக்கதை சொல்லும் செய்திகள் ஏராளம். தொலை நோக்கையும், தரிசன வீச்சையும் இழந்துவிட்ட தற்கால சமுதாயமும், தலைமைகளும் அழிந்து போவார்கள் என்ற அர்த்தம் கொடுக்கப்படவில்லை. எப்படியோ அவர்கள் வாழ்வார்கள். வாழ்வார்கள் என்பதை விட தம் காலத்தை ஒருவாறு கடத்தி முடிப்பார்கள். ஆனால் உண்மையான வாழ்வை வாழமாட்டார்கள். வாழவும் முடியாது

இருட்டில் ஆடும் குருட்டு நாடகத்திலே இன்னொரு வேடிக்கை என்னவெனில், எவரொருவர் குருட்டாட்டத்தில் இருந்து விழித்தெழுந்து மற்றையோரது பார்வையற்ற தன்மையை எடுத்துரைக்கின்றாரோ அவரைத் தம்சார்பாய் ஈர்க்க முயல்வது அல்லது சமுதாயத்திலிருந்து விரட்டியடிப்பது ஆகும். ஏனைய பார்வையற்ரோரைப் பொறுத்த மட்டில் பார்வையுள்ளவர் அல்லது விழித்தெழுந்தவர் ஒரு நோயாளி – ஊனமுற்றவர்.

இருட்டினில் குருட்டாட்டம். இது வரலாற்றின் தலைவிதி. சங்கிலித் தொடரான தலைவிதி. தொலைநோக்கை அடைதலும், தரிசன வீச்சு வாய்க்கப்பெறுதலும், விழித்தெழுதலும் வரலாற்றில் உளதே. ஈழத்துக் கவிஞர் அ. யேசுராசாவின் வரிகள் இங்கு நல்ல முத்தாய்ப்பாய் அமையும்:

எனது முகமும்
ஆன்மாவும்
அழிகின்றன,
ஒருமையென,
மூடுண்ட வட்டத்துள்
ஒடுங்கி இருக்க
கேட்கப் பட்டேன்.

கால நகர்வில்
தாங்காமையில் வெளிவந்து
சிறு தூரம்
நடக்கத் தொடங்கினேன்.
தடிகளுடன் எனைச் சூழ்ந்தனர்
'கலகக்காரன்' என்று சொல்லி. (நன்றி: "மரணத்துள் வாழ்வோம்")

★ பெரிய மனிதர்கள் உச்ச நிலையை அடைந்தவர்கள் என்றால் அவர்கள் திடீரென தாவிக் குதித்தவர்கள் அல்ல. மற்றவர்கள் தூங்கும்போதும் அவர்கள் உழைத்து முன்னேறியவர்கள்.

**- லோன் பெல்லோ**

# கொடுங்கோண்மை: ஓர் ஒப்பீட்டு நோக்கு

- ஆ. ஜஸ்ரின்

## முன்னுரை

தெய்வப் புலவர் வள்ளுவரின் சிந்தனைத் துளியில் நனையாத எந்தத் துறையும், எந்த விடயமும் இல்லை. மண்வாழ் மாந்தர் தம் மகத்தான, மாண்பான வாழ்வுக்குத் தேவையான அனைத்துக் கருத்துக்களையும் உள்ளங்கையில் நெல்லிக்கனி போன்று அக்கு வேறாக ஆணி வேறாக எடுத்துக் கூறியுள்ளார் பொய்யா மொழிப் புலவர். அவர்தம் சிந்தனை வலையில் அகப்பட்ட கொடுங்கோண்மை பற்றி விரிவாக, தெளிவாக இவர் எடுத்துரைக்கின்றார். அரசியல் நிபுணத்துவம் கொண்டிராத புலவர் பலரும் மெச்சத்தக்க பல கருத்துக்களைக் கூறியுள்ளார்.

இவரின் கொடுங்கோண்மை பற்றிய கருத்துக்களைப் பார்க்கிறபோது இவர் கொடுங்கோண்மையை வலுவாக எதிர்க்கும் ஒரு மனிதனாக எனக்குத் தெரிகின்றார். இவரது இக் கருத்துக்கள் மேலைத்தேய சிந்தனையாளர்களின் சிந்தனைகளுடன் ஒத்துப்போகின்றமையையும், இன்னும் சிலரின் சிந்தனைகளுடன் முரண்பட்டு நிற்கின்றமையையும் காணக்கூடியதாயுள்ளது. எனவே இச்சிறு கட்டுரையில் வள்ளுவன் தந்த அரசியற் சிந்தனைகளின் ஒரு அங்கமாகிய கொடுங்கோண்மை எவ்வாறு வரலாற்றின் தலைசிறந்த சிந்தனையாளர்களின் கருத்துக்களுடன் செல்கின்றது என்பதை விளக்கவுள்ளேன். இவ்வரலாற்றாசிரியர்களில் புனித தோமஸ் அக்குவாயினஸ், அரிஸ்ரோட்டில், தோமஸ் கொப்ஸ், நீக்லஸ் மக்கியவெல்லி என்ற சிந்தனையாளர்களது கருத்துக்களையும் அவருடன் இணைத்துக் கூற முற்படுகின்றேன்.

இங்கு நாம் கொடுங்கோண்மை பற்றி நேரடியான கருத்துகளை முன்வைத்த சிந்தனையாளரை எடுத்து நோக்குவது நல்லது. இவ்வாறானோரில் யோண்லொக், புனித தோமஸ் அக்குவாயினஸ் என்போர் முக்கியமானவர்களாவர். புனித தோமஸ் அக்குவாயினஸ் அவர்களின் கருத்துக்களை சற்று ஆராய்தல் நன்று.

புனித தோமஸ் அக்குவாயினஸ் ஒற்றையாட்சியை ஆதரிக்கும் ஓர் சிந்தனையாளர். இவர் கிறிஸ்தவராகையால் இவர் தனது சிந்தனைகளில் கிறிஸ்தவமும், கிறிஸ்தவச் சிந்தனைகளும், பாரம்பரியங்கள், வரலாறுகள் என்பன கலந்து வருவதை தவிர்க்க முடியாதவராக எனது கண்களுக்குப் புலப்படுகின்றார். விவிலியத்தில் ஒரே கடவுள் கொள்கையைப் பின்பற்றிய நல்ல துறவி இவர். ஒற்றையாட்சியைக் குறித்து தனது சிந்தனைகளை வெளியிட்டபோது அதன் எதிர் விளைவாகிய கொடுங்கோண்மையைக் குறித்துக் கூறும்போது ஒற்றையாட்சி எவ்வகையிலும் கொடுங்கோண்மைக்கு இட்டுச் செல்லலாகாது என்று கூறுகின்றார். இவர் கொடுங்கோண்மையை இரண்டாகப் பிரித்துக் காட்டுகின்றார்.

1. அதீத கொடுங்கோண்மை (major tyranny)
2. சாதாரண கொடுங்கோண்மை (minor tyranny)

சாதாரண கொடுங்கோண்மையைக் குறித்துக் கூறும் போது இதை எதிர்த்துப் போராடும் போது இதன் பக்க விளைவாக எதிர்பாராத பாரதூரமான, கொடுமையான விழைவுகள் ஏற்படலாம் என்று எச்சரிக்கின்றார். மேலும் சாதாரண கொடுங்கோண்மைக்கு எதிரான புரட்சி வெற்றியில் முடிந்தால் அதை தலைமைதாங்கி நடாத்திச் செல்பவன் மீண்டும் புதிதான கொடுங்கோலாய், முன்னையவனைவிட கொடுமையானவனாகத் தோன்றலாம் என்று எச்சரிக்கின்றார்.

அதீத கொடுங்கோண்மை பற்றிக் கூறுகையில் இதை எதிர்த்துப் போராடுவது ஒருவனது தனிப்பட்ட வேலையல்ல என்றும் மாறாக மக்கள் அனைவரும் தாமாக ஒன்று சேர்ந்து, தமது சம்மதத்தைத் தெரிவித்து இதற்கு எதிராகப் போராட வேண்டும் என்கிறார். இவ்வாறு தோமஸ் அக்குவாயினஸ் கொடுங்கோண்மையின் தன்மையினையும், அதன் விளைவுகளையும், எடுத்துக் கூறி அதை எவ்வாறு எதிர்த்துப் போராடும் வழிமுறைகளையும், அதன் பிரதிபலிப்புக்களையும் இவர் தெள்ளத் தெளிவாக ஆராய்ந்துள்ளார்.

இவற்றையும் கண்முன் கொண்டு வள்ளுவரின் கருத்துக்களை ஒப்புநோக்குடன் ஆராய்தல் நலமே. வள்ளுவனார் கொடுங்கோண்மையை வெறுத்தார் மாறாக செங்கோண்மையை ஏற்றார். கொடுங்கோண்மை எதிர்ப்புக் கருத்து இவரின் கொடுங்கோண்மை அதிகாரத்தின் முதற் குறளிலேயே வருகிறதை காணலாம்.

> "கொலை மேற் கொண்டாரின் கொடிதே அலை மேற்கொண்டு
> அல்லவை செய்து ஒழுகும் வேந்து"
>
> **(குறள் - 551)**

என்ற குறளினூடாக துன்புறுத்தும் தொழிலை மேற்கொண்டு, நீதி அல்லாதன செய்து வாழ்கின்ற அரசன் கொலைத் தொழிலை மேற்கொண்டதைக் காட்டிலும் கொடியவனாவான் என்கிறார். இக்கருத்து கொப்சின் கருத்தோடு ஒத்துப்போவதை காணலாம். இயற்கையிலேயே மனிதனை இராட்சத சுறாவாக பார்க்கும் கொப்ஸ் மனிதனின் அமைதியான நிலையை இயற்கைக்கு மாறான நிலை என்கின்றார். மனிதன் வன்முறை ஏதும் இன்றி இருக்கும்போது மனிதனில் வாசம் செய்த இராட்சத சுறா அரசுக்குள் சென்றடைவதாகக் கூறுகின்றார் கொப்ஸ். இவ்வாறு அரசு கொடுங்கோண்மையாகும்போது கொடுங்கோலன் இராட்சத சுறாவாக உருவெடுக்கின்றான். கொப்ஸ் தனது புத்தகத்தில் "leviathan" மனிதன் "இராட்சத சுறா" போன்று இருக்க வேண்டும் என்கிறார். இந்த மனிதன் அரசனாகும்போது அவ்வரசு கொடுங்கோண்மையாக மாறுகிறது. அவனைக் குறித்து அனைவரும் அஞ்சி, நடுங்கி வாழவேண்டும். மற்றைய உயிர்களுக்கு எப்போதும் துன்பம் விழைவிப்பவனாக அரசனைக் காண்பிக்கின்றார் கொப்ஸ்.

தொடர்ந்து வள்ளுவனார் "வேலொடு நின்றான்....." எனத் தொடங்கும் குறளூடாக ஓர் கொடுங்கோலன் தன் மக்களிடம் இருந்து பொருள், பண்டங்களை வற்புறுத்திப் பெற்றுக்கொள்வது கள்வர்கள் வழிப்பறி செய்வது போன்றது என்கின்றார்.

சிந்தனையாளர் மக்கியவெல்லி செங்கோலைப் பற்றிக் கூறும்போது அவன் உள்ளிருந்தோ, வெளியிருந்தோ வரும் ஆபத்துக்களைக் குறித்து விழிப்புணர்வுள்ளவனாகவும், மக்களை என்றும் திருப்திப்படுத்துபவனாகவும் காணப்பட வேண்டும் என்கிறார். இப்பணியில் இருந்து விலகுவோன் செங்கோலாகின்றான். இதை இவர் வலியுறுத்திக் கூறும்போது "இளவரசன்" (Prince) எனும் நூலில் இளவரசனின் குணாதிசயங்களை குறித்துக் கூறும்போது இளவரசனானவன் சிங்கம் போலும் நரி போலும் ஆட்சி செலுத்தக் கூடியவனாக இருக்க வேண்டும் என்கிறார்.

கொடுங்கோலன் படைப்புலத்தோடும், சட்டத்தோடும் ஓயாது பயணித்துக் கொண்டிருப்பதால் இராயதந்திரமும், படைப்புலமும் இணைந்திருக்க வேண்டும் என்கின்றார். சிங்கம் அனைத்து விலங்குகளுக்கும் இராஜாவாகவும் இருப்பதால் அனைத்து விலங்குகளுக்கும் சிம்ம சொற்பனமாக விளங்குகிறது என்கிறார். எனவே அது தான் நினைத்ததை நிலைநாட்டுகிறது என்கிறார். இவ்வாறே அரசனும் இருக்க வேண்டும் என்கின்றார். இவ்வாறு மக்கிய வெல்லியின் கருத்துக்கள் கொடுங்கோண்மை நோக்கிச் செல்வதைக் காணக்கூடியதாயுள்ளது. இளவரசன் தமது மக்களை அன்பால் வெல்ல முடியாது போயினும் அவர்கள் அரசன் மேல் உள்ள பயத்தால் அவனது ஆணையை நிறைவேற்றக் கூடியதாக வைத்திருக்க வேண்டும் என்று மேலும் கூறுகின்றார்.

வள்ளுவனார் தொடர்ந்தும் கொடுங்கோண்மை குறித்து கூறும்போது செங்கோண்மை கோலோச்சி நிற்கும்போது மக்கள் மகிழ்ந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து நிற்பர் என்றும் மாறாக கொடுங்கோலன் ஆட்சியின்போது மக்கள் சிந்தும் கண்ணீரானது அவனது செல்வத்தை, புகழை, நற்பெயரைக் குறைக்கும் கருவியாக மாறிவிடுகின்றது. என்ற இக்கருத்தை புலவனார் "அல்லல்ப்பட்டு ஆற்றாது...." எனும் குறளூடாக தந்து செல்வதைக் காணலாம்.

தொடர்ந்து வள்ளுவனார் கொடுங்கோலன் அரசன் ஆட்சி புரிகின்றதால் அவனது நாடு எதிர் நோக்கும் துன்பங்களைக் கூறுகின்றார். கொடுங்கோலன் ஆட்சிபுரியும் போது நாட்டு மக்களுக்குச் சந்தோசம், மகிழ்ச்சி, நிறைவு என்பன அற்றுப்போகின்றது. இதனால் மக்கள் மன்னன்மீது அன்பு அற்றவர்களாய் மாறி விடுகிறார்கள். மக்களின் புகழே அரசனை அரியணையில் நிலை நிறுத்தும் தூண் அது அகன்று போனால் மன்னனின் மாட்சியும் அகன்று போகும் என குறள் 556ல் கூறுகிறார்.

"அரசன் எவ்வழி அவ்வழியே நாமும்" என்ற சான்றோரின் கூற்றுக்கு இணங்க, அரசன் கொடுங்கோலனாய் நேர்மையற்ற ஆட்சி செலுத்தும்போது நாடு செழித்துவளராது, கலைகள் அழிந்து போகும் என்கிறார். நாட்டில் மழை இல்லாது போயின் மக்கள் எவ்வாறு துன்பமடைந்து வாழ்வாரோ அவ்வாறு கொடுங்கோலன் ஆட்சி நிலவும் போதும் மக்கள் துன்பத்தால் வாடுவார்கள் என்கின்றார். கொடுங்கோலனின் காலத்தில் அவன் செய்யும் அநீதியால் பணம் அற்றவர்கள் எதிர்நோக்கும் கஸ்டத்தை விட பணமுடையோர் எதிர்நோக்குவர் என்கின்றார் புலவர்.

கொடுங்கோண்மையின் விளைவால் வான்மேகம் பொய்த்துப் போகும் என்றும் நாட்டின் வளம் அனைத்தும் வறண்டு போகும் என்றும் கூறும் புலவர்கள் அரசன் முறைதவறி ஆளும்போது பசுக்கள் பால் தருகின்றமையைக் குறைத்துவிடும் என்கிறார்.

நாட்டில் நல்லாட்சி நிலைக்காது போயின் நாட்டின் கலைகளுக்கும், செல்வத்துக்கும் பேரழிவு உண்டாகும் எனக் கூறும் புலவர் இதன் பொருட்டு அந்தணரும் சமய நூல்களை மறந்து போவார்கள் என்று கூறுவதால் நாட்டில் அனைத்தும் அழிந்து போகும் என்கிறார்.

## முடிவுரை

இவ்வாறாக வள்ளுவனார் தனது குறள்களினூடான கொடுங்கோண்மை பற்றி எடுத்துரைத்துள்ளார். கொடுங்கோண்மை, கொடுங்கோலன், அவனது ஆட்சியின் தன்மை, அவனது நாடு எதிர் நோக்கும் சிக்கல்கள் என்பவற்றை இவர் எடுத்துக் கூறியுள்ளார். வள்ளுவனாரின் இக்கருத்துக்கள் நவீன காலத்தில் உருப்பெற்றமையும் நாம் காணக் கூடியதாக உள்ளது. சர்வாதிகளின் தோற்றமும், அவர்களின் எழுச்சியும், வீழ்ச்சியும், எமக்கு வள்ளுவரின் கொடுங்கோண்மை பற்றிய கருத்துக்களை நினைவூட்டச் செய்கிறது. புலவனார் தோன்றிய ஆசிய மண்ணில் கொடுங்கோண்மை தோற்றம் பெறாது போயினும் ஐரோப்பிய மண்ணில் இவரது கருத்துக்கள் உண்மையானவை, காலத்தால் அழியாதவை என்பதை சுட்டிக்காட்ட சர்வதிகாரிகள் தோற்றமும், மறைவும் அமைந்தன. இச் சர்வதிகாரிகளின் தோற்றமும் வீழ்ச்சியும் மேற்குறிப்பிட்ட மேற்குலக சிந்தனையாளர்களின் சிந்தனைகளையும் மெய்ப்பிக்க வைத்தன என்பதில் ஐயமில்லை.

* "உன் நோக்கத்தை வாளால் சாதித்துக் கொள்வதை விட உன் புன்சிரிப்பால் சாதித்துக் கொள்வதே சாலச் சிறந்ததாகும்."

  **- ஷேக்ஸ்பியர்**

* பிறரிடம் குறைகளை காண்பவன், தான் பெரிய அறிவாளி என எண்ணிக் கொள்கிறான். தன் குறைகளை என்றுமே சிந்திக்காத அவன்தான் அறிவீனன். நம் அறிவீனத்தை உணர்வதே உண்மையான அறிவை பெற முதற்படி

  **- சோக்ரடீஸ்**

* சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போது அழுபவன் தெம்பற்றவன். அழுகையிலிருந்து சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகின்றவன் நெஞ்சுரமுள்ளவன்.

  **- அ்ரமிரல் மார்ஸல்**

# ஆன்மீகப் பண்பு

- வித்துவான் புலவர் "வேல்மாறன்"

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனித உடலின் இயக்கம் உணர்வு சிந்தனை இவற்றை எல்லாம் தமிழ் மக்கள் நன்றாக அறிந்து வைத்துள்ளனர். இவற்றைப் பொதுவாக அறிவு நிலையில் அடக்கினர். தொல்காப்பியர் உயிர் நிலைகளைப் பகுத்துக் கூறும்போது அறிவின் தன்மைக்கு ஏற்ப பகுத்துக் காட்டியுள்ளார்.

*ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே*
*இரண்டு அறிவதுவே அதனோடு நாவே*
*மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கை*
*நான்கு அறிவதுவே அவற்றொடு செவியே*
*ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே*
*நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே*

(தொல். மரபியல் - 27)

தொல்காப்பியர் தரும் அறிவு நிலையைப் பிற்காலச் சான்றோர் புலன்கள் என்று சொல்வர்.

மானிட உடலின் புலன்களை ஐந்தாகவும் புலன்களுக்கு வாயிலை ஐந்து பொறிகளாகவும் பகுத்துக் கண்டனர் பெரியோர். புலன்களின் நுட்பத்தையும் அவற்றின் ஆற்றலின் பெறுமானத்தையும் உணர்ந்து விளக்கமும் தரத் தொடங்கினர்.

மானிடத்தின் ஆற்றல் மிக வலுவானது. அவ் ஆற்றலை ஐம்புலன்களை அடக்குவதால் பெறலாம். ஐம்புலன்களை அடக்கியோர் தேவர்களை விட மேலானவர் ஆவார் என்பதை நீத்தார் பெருமையில் வள்ளுவர் கூறுகின்றார்.

*ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்*
*இந்திரனே சாலும் கரி*

(குறள் - 35)

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளும் அப்பொறிகளால் ஏற்படும் புலன்களும் தொழிற்படும் இடத்திலேதான் மனித வாழ்வின் நடமாட்டம் முழுமை பெறுகின்றது. ஒரு பொறியின் தொழிற்பாட்டால் பெறும் புலன் தடைப்படும்போது அதனால் அவனைக் குறைபாடு உடைய மனிதன் என்கின்றோம். இவ்விதமாக அரும்பேறான ஐம்பொறிகளும் அவற்றால் பெறும் ஐம்புலன்களும் மனித சீவியத்துக்கு எத்துணை பெறுமானம் உடையன என்பதை நாம் அறியாமலல்ல.

ஐம்புலன்களின் இன்றியமையாத நிலை எமக்கு இருக்க வேண்டியவை என்றாலும் இப்பொறிகளால் விளையும் துன்பங்களோ மிக மோசமானது என்பதையும் நாம் உணரவேண்டியவராய்

இருக்கின்றோம். பொறியைவிட அவற்றில் இருந்து பெறப்படும் புலன்கள்தாம் நம்மைப் படுகுழியில் வீழ்த்துகின்றன. புலன்கள் மனித சீவியத்தின் நற்பண்புகளை வளர்க்கக் கூடியதாய் அதனால் தமக்கும் பிறர்க்கும் நன்மை பயக்கக் கூடியதாய் விளங்க வேண்டுமே தவிர தீமையின் ஊற்றாய் மாறிவிடக்கூடாது. தீமை என்று நாம் குறிப்பிடுவது குற்றம் உள்ள வாழ்வாகும். இதை பொய்மை நிறைந்த வாழ்க்கை என்பர்.

பொய்மை இல்லாத – பொய் தீர்ந்த வாழ்க்கையில்தான் ஒழுங்கான நடைமுறையின் சீவியத்தை மனிதனால் ஏற்படுத்த முடியும். பொய் தீர்ந்த ஒழுக்க வாழ்வே இறைவழி வாழ்க்கையாகும். இவ்வாழ்க்கை ஒன்றுதான் நீண்ட அமரத்துவமான வாழ்வை உலகுக்கு நிலைநிறுத்திக் காட்ட வல்லது.

பொய் தீர்ந்த குற்றமற்ற ஒழுங்கான நீண்ட நல் வாழ்வுக்கு வித்தாக மூலாதாரமாக இருப்பது ஐம்புலன்களை அடக்கும் ஆற்றலாகும்.

ஐம்புலன்களை அடக்கும் ஆற்றலை முழுமையாய் இயல்பாக மனிதன் கொண்டிருப்பதில்லை. அதைப் பயிற்சி நெறியில்தான் வளர்த்துக் கொள்ள வேண்டும். பயிற்சி நெறியில் வளர்த்துக்கொள்ளும் அவ்வாற்றலின் முழுமுதலாய் இருப்பவன் “பொறிவாயில் ஐந்தவித்தான்” என்று சொல்லக் கூடிய இறைவனே. அவ்விறைவனை நாம் தொழுவதற்கும் அவனைத் தொழுவதால் பெறும் பொய் தீர்ந்த குற்றம் இல்லாத ஒழுங்கான நீண்ட வாழ்வைப் பெறுவதற்கும் ஐம்புலன்களை அடக்கி வாழும் பயிற்சி நெறியை மேற்கொள்ளும் யோக மார்க்கத்தின் வழியதாய் இறையுணர்வைப் பெறலாம் என்பதையே வள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

*பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க*
*நெறிநின்றார் நீடு வாழ்வார்*

(குறள் - 6)

இதில் இறைவனைப் பொறிவாயில் ஐந்தவித்தான் என குறிப்பிடுகின்றார் வள்ளுவர். ஐம்பொறி வாயில்களால் பெறப்படும் புலன்கள் ஐந்தினையும் அடக்கியவன் இறைவன் என்பது இதன் பொருளாகும். மேலும் இறைவனின் ஐம்புல அடக்கத்தின் ஆற்றலின் பேறு இதனால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஐம்புலன்களை அடக்கிய ஆற்றலின் முழுமைப் பேறான முதல்வனாகிய இறைவனின் வழியதாய் நாமும் ஐம்புலன்களால் வரும் தீமைகளில் இருந்து நம்மைக் காத்து குற்றம் தீர்ந்த பொய்யில்லாத நீண்ட வாழ்க்கையை நாம் பெற்றுக்கொள்ள முடியும். அவ்விதமான நீண்ட வாழ்வைப் பெறுமிடத்து நல்வினை தீவினை இரண்டுமே நம்மீது ஆதிக்கம் பெறும் வலுவை இழந்து விடுகின்றது.

அறியாமை என்னும் இருள் நம்மிடத்தில் இருப்பதற்கு முக்கிய காரணமாய் அமைந்திருப்பது ஐம்புலன்களின் மட்டில் நாம் கொண்டுள்ள மயக்கமே. ஐம்புலன்களின் மயக்கம் நம்மீது

இருக்கும்போது அறியாமை இருளும் நம்மை முழுமையாக ஆட்கொண்டு விடுகின்றது. அதனால் இறைவன் பொருட்பேறாய் விளங்கும் அருட்பேறும் அருட் பேறினால் நிகழும் நற் செயல்களும் நம்மை விட்டு நீங்கி விடுகின்றன.

இறையுணர்வால் பெறும் அருட்பேறான பொருள் நம்மோடு சேர்வதற்கும், அதனால் அருளுடையோனாய் விளங்கும் இறைவனைப் புகழ்ந்து பாடுவதற்கும் அவ் இறைவன் மீதுள்ள ஆன்மீகப் பண்பு நம்மீது நிலை நிற்கும் போதுதான் அறியாமையால் உண்டாகும் நல்வினை தீவினைகள் நம்மை வந்து சேரா.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

(குறள் - 5)

## இலட்சிய பாதையில் வரும்தடைகள்

**நம்பிக்கை குறைவு**
**தோல்வியைக் கண்டு துவளுதல்**
**வேலையைத் தள்ளிப் போடுதல்**
**பிறர் உதவியைப் பெற தயங்குதல்**
**பிறரால் உற்சாகப்படுத்தப் படாத நிலை**
**செயல்களை வரிசைப் படுத்தாதிருத்தல்**
**செய்ய முடியாததை முடியாது என்று**
**சொல்ல முடியாத நிலை**
**எண்ணுவதை தெளிவுடன் சொல்ல முடியாத நிலை**

**பலவகைப் பணிகளை ஏற்றுக் கொள்வது**
**மனம் ஒன்றிச் செயல்படாத நிலை**
**உறுதியற்ற மன நிலை**
**தாழ்வு மனம்**
**கடந்த காலத்தின் தோல்விகள்**
**கடினமாக உழைக்க மனமின்மை**
**வெற்றியை அனுபவித்திராத நிலை**
**எதிர்பாராத விபத்து, இழப்பு, இறப்பு**
**பணத்திலே பற்றாக்குறை**
**எதிர்பாராத பய உணர்வு**
**எதிரிகளின் தாக்குதல்.**

*அ. றொக்சன் குரூஸ்*

# உட்பகை

- ஸ். டியூக் வின்சன்

## முன்னுரை

உட்பகை என்ற பதத்திற்கு தமிழ் அகராதியின்படி வெளிப்படையாக தெரியாத விரோதம் எனப் பொருள் கொடுத்துள்ளார்கள். இந்தக் கருத்தின்படி ஒரு நாட்டில் அரசனுடன் அவனுக்கு தெரியாமல் அவன் கூடவே இருக்கும் பகை எனக் கூறலாம். அதாவது அயல் நாட்டில் இருந்து மேற்கொள்ளப்படும் படையெடுப்பை விட ஆபத்தானதும் பெரும் கேடு விளைவிப்பதுமான ஒரு பகை எனலாம். அரசனுடைய சொந்த நாட்டில், அதாவது அவன் ஆட்சி செலுத்துகின்ற குடி மக்கள் மத்தியில் இருந்து அரசனுக்குத் தெரியாமல் அரசனுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பகை உணர்வை உட்பகை என வேறு சில ஆசிரியர்கள் விபரித்துள்ளனர். உட்பகையை மேலும் விபரிக்கும் ஆசிரியர்கள், ஓர் அரசன் தன் அரசைப் பொறுப்பேற்கும் போது முதல் கவனிக்க வேண்டியது என்னவென்றால் தன் மக்கள் மத்தியில் இருந்து பகையோ அல்லது விரோதமோ வராமல் பார்த்துக்கொள்வதே ஆகும். அதற்காக மக்களை அடிமையாக்கிக் கொள்ளக் கூடாது மாறாக அவன் மக்களை அடிமைகளாக்கும்போது அவன் கொடுங்கோல் அரசனாக மாறுகின்ற அல்லது மாற்றப்படுகின்ற சந்தர்ப்பங்கள் ஏற்படலாம்.

ஒரு அரசன் பல படையெடுப்புக்களை மேற்கொண்டு பல வெற்றிகளை காணலாம் ஆனால் அவன் உட்பகையை கவனிக்காது விட்டால் அவன் இருப்பிடம் ஒரு நொடிப்பொழுதில் இல்லாமல் போகக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. ஒரு நாட்டில் அரசனுக்கும் அவனுடைய உட்பகைவர்களுக்கும் இடையே இருக்கும் பிரச்சனையை மட்டும் நாம் உட்பகை என்று கூறிக்கொள்ள முடியாது மாறாக இது ஓர் குடும்பத்திற்குள், ஒரு சமூகத்திற்குள், குழுவுக்குள், ஒரு சபைக்குள் இவ்வாறாக பல இடங்களில் ஏற்படக்கூடிய ஒரு பிரச்சினையாகவும் கூறிக்கொள்ளலாம்.

## 1. உட்பகை பற்றிய சில மெய்யியலாளர்களின் கருத்துக்கள்.

மனித வரலாற்றில் பல மெய்யியலாளர்கள் மற்றும் பல வரலாற்று ஆசிரியர்கள் உட்பகையை பல்வேறு விதமாக நோக்கி இருப்பதை காணலாம். அந்தவகையில் சில மெய்யியலாளர்களை எடுத்து நோக்கின்,

### *1.1 பிளேட்டோ*

இவர் உட்பகை என்ற பதத்தை தன்னுடைய நூல்களிலே சிறப்பாக நோக்கி இருப்பதை காணலாம். பகைமை நிலை அல்லது குழப்ப நிலை (feverest condition) என்று பெயரிட்டு நோக்குவதை காணக் கூடியதாக இருக்கின்றது. இவருடைய கருத்தின்படி ஒரு

அரசின் கீழ் மூன்று விதமான மக்கள் இருக்க வேண்டும்: ஆளும் கட்சி, படைவீரர், தொழிலாளர்கள்.

ஆனால் இந்த ஆளும் கட்சியினர் சில தருணங்களில் சில அச்சுறுத்தல்களை சந்திக்க நேரிடுகின்றது. அவ்வாறான அச்சுறுத்தல்கள் இரண்டு விதமாக அமைகின்றது எனக் கூறுகின்றார்.

1. வெளிநாட்டு அச்சுறுத்தல்கள்
2. உள்நாட்டு அச்சுறுத்தல்கள்

இந்த வகையில் உள்நாட்டு அச்சுறுத்தல்களை எடுத்து நோக்கும்போது, பிளேட்டோவின் கருத்தின்படி, போர்புரியும் மக்கள் மத்தியில் இருந்தோ அல்லது தொழிலாளர்கள் மத்தியில் இருந்தோ அந்த நாட்டின் ஆளும் கட்சியினர் சில எதிர்ப்புக்களைச் சந்திக்க நேருகின்றது. தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய ஊதியத்தை சரியான முறையில் கொடுக்காதவிடத்தோ அல்லது இராணுவத்தினருக்கு ஏற்ற மரியாதையை கொடுக்காதவிடத்தோ அந்த நாட்டின் ஆளும் கட்சியினர் இவ்வாறான எதிர்ப்புக்களையும் அச்சுறுத்தல்களையும் சந்திக்க நேரிடலாம் என்று கூறுகின்றார்.

இதனை விட அவர் மேலும் கூறுகையில் “தணிக்கை” (censorship) என்ற ஒரு பதத்தின் அடிப்படையில், அரசன் தனது கட்டுப்பாட்டிற்குள் சிலரை வைத்திருக்க வேண்டும் எனக் கூறுகின்றார். கவிதை ஆசிரியர்கள், நாவல் ஆசிரியர்கள், ஓவியர்கள் இவர்களை அரசன் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும் எனக் கூறுகின்றார். ஏனெனில் இவர்கள் தங்களுடைய எழுதும் ஆற்றலாலும், ஓவியம் தீட்டும் வல்லமையாலும் மக்களின் மனதை இலகுவில் திசை திருப்பி விடக்கூடியவர்கள் என்பதை பிளேட்டோ தெளிவாக உணர்த்திக் காட்டுகின்றார். இவ்வாறானவர்கள் மக்களின் மனதை இலகுவில் மாற்றி அரசனுக்கு எதிராக கிளர்ச்சி செய்ய தூண்டக்கூடியவர்கள் என்பதை காட்டுகின்றார்.

### *1.2 அரிஸ்ரோட்டில்*

இவருடைய கருத்தின்படி உட்பகை தோன்றுவதற்கு முக்கிய காரணங்களாக அமைவன “ஏழ்மை” அல்லது “வறுமை”. இந்த ஏழ்மை அல்லது வறுமை ஒரு அரசை முடிவுக்கு கொண்டுவரக்கூடியதும், அவ் அரசிற்கு எதிராகப் புரட்சி செய்யக் கூடியதுமான ஒன்றாகக் காணப்படுகின்றது. மேலும் அவர் கூறுகையில், ஒரு நாட்டிற்கு மத்திய வர்க்கத்தினர் கட்டாயமாக இருக்க வேண்டும் என்றும் அவ்வாறு அவர்கள் இல்லாத பட்சத்தில் தொழிலாளர்கள் அதாவது எண்ணிக்கையில் மிகுதியான ஏழை மக்கள் அரசிற்கு எதிராக புரட்சி செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள் கூடுதலாக இருக்கின்றன எனக் கூறுகின்றார். அத்தோடு இவ்வாறான பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இந்த ஏழ்மையை அல்லது வறுமையை அந்த நாட்டில் இருந்து இல்லாமல் செய்வதற்கு

இந்த நாட்டின் அரசனோ அல்லது அரசோ முயற்சி எடுக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

*1.3 அகுஸ்தினார்*

இவர் தன்னுடைய கருத்தைக் கூறுகையில் ஒரு நாட்டில் எப்போது அமைதி இல்லாமல் போகும் என்றால் அந்த நாட்டில் எப்போது நீதி இல்லாமல் போகிறதோ அப்போதுதான் எனக் கூறுகின்றார். ஒரு நாட்டில் நீதி இல்லாமல் போகும்போது மக்கள் மத்தியில் குழப்பங்கள் ஏற்பட்டு அந்த நாட்டின் அரசனோ, அரசோ, அல்லது ஆழும் கட்சியோ தங்களுடைய ஆட்சியை முடிவுக்கு கொண்டுவரக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். அயல் நாடுகளில் இருந்து மேற்கொள்ளப்படும் படையெடுப்புக்களோ அல்லது வேறு பகைகளோ இல்லாத நிலை தான் அமைதியான நிலை என்று கூற முடியாது. படை எடுப்புக்கள் இல்லாமலும், நீதியுடனும் ஒரு அரசு காணப்பட்டால் அதுதான் ஒரு அரசின் அமைதியான நிலை எனக் கூறுகின்றார். எந்த அரசுகள் மத்தியில் இருந்து நீதி தூக்கி எறியப்படுகின்றதோ அந்த அரசு ஓர் அமைதியான அரசாக இருக்காது மாறாக அது கொள்ளையர்கள் நிறைந்த இடமாகவே இருக்கும் என்று குறிப்பிடுகின்றார்.

*1.4 மாக்கியவல்லி*

இவர் தன்னுடைய கருத்தில், உட்பகையாக இருந்தாலும் சரி அல்லது வேறு நாட்டுப் பகையாக இருந்தாலும் சரி அவற்றைச் சமாளிப்பதற்கு ஒரு அரசன் சில பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் எனக் கூறுகின்றார். அந்த வகையிலே ஒரு நாட்டின் அரசனோ அல்லது அரசோ அந்த நாட்டு மக்களின் விருப்பு, வெறுப்புக்களை நன்கு அறிந்து இருக்க வேண்டும். அத்தோடு சில சந்தர்ப்பங்களிலே இரக்கம் உடையவனாகவும் அதே வேளையில் கொடூரம் உள்ளவனாகவும் மேலும் நரியை போன்று தந்திரமானவனாகவும், சிங்கம் போல் வீரம் உள்ளவனாகவும் இருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். இவ்வாறான பண்புகளில் ஒன்றை மட்டும் கொண்டிருந்தால் அவனுடைய ஆட்சி மிக விரைவில் முடிவுக்கு வந்துவிடும் என குறிப்பிடுகின்றார். ஏனெனில் அவன் இரக்கத்தை மட்டும் கொண்டிருந்தால் அங்கு நீதி இருக்காது. அது போல் வீரமுள்ளவனாக மட்டும் இருந்தால் தனது நாட்டில் ஏற்படும் உட்பகையை அவனால் அறிந்துகொள்ள முடியாததோடு அதை நல்லமுறையில் முடிவுக்கு கொண்டு வரவும் இயலாது எனக் குறிப்பிடுகின்றார்.

*1.5 கார்ல் மாக்ஸ்*

இவரது கருத்தின்படி ஒரு நாட்டில் முதலாளிகள் தொழிலாளிகள் என இருசாரார் காணப்படுகின்றனர். இவர்கள் மத்தியில் உட்பகை எவ்வாறு ஏற்படுகிறது என கூறும்போது; முதலாளிகள் தொழிலாளர்களைப் பயன்படுத்தி மேலும் மேலும் முதலாளிகளாக வளர்ந்துகொண்டிருக்கும் அதே வேளை

பெரும்பான்மையாக வாழும் தொழிலாளிகள் தங்களுடைய நிலையில் இருந்து சற்றும் மேலே உயராதவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிலையை குறிப்பிட்டு காட்டுகின்றார். இவ்வாறான சூழ் நிலையில் முதலாளிகளின் வருமானம் நாளுக்கு நாள் கூடும் அதே வேளை தொழிலாளர்களின் வருமானம் அதே அளவில் இருப்பதோடு அவர்கள் மேலும் மேலும் ஏழைகளாக மாறிக்கொண்டிருக்கிறதைக் காட்டுகின்றார். இப்படியான சூழ்நிலையில் இந்த முதலாளிகளுக்கு எதிராக குழப்பத்தை அல்லது எதிர்ப்பை தொழிலாளிகள் காட்டுகின்றார்கள். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஒரு நாட்டின் ஒழுங்கு, அதன் அமைப்பு சீர் குலைந்து போவதை ஆசிரியர் எடுத்துக் காட்டுகின்றார்.

## 2 திருவள்ளுவரின் சிந்தனையில் உட்பகை

திருக்குறளில் திருவள்ளுவர் தன்னுடைய பொருட்பாலிலே உட்பகை பற்றி பல உவமை, உருவங்கள் வாயிலாக பத்துக் குறட்பாக்களிலே மிக அழகாகவும், ஆணித்தரமாகவும் தனது கருத்துக்களைத் தந்துள்ளார். அந்தவகையிலே இவ்வுலகத்திலே நிழலும் நீரும் மனிதனுக்கு இன்றியமையாததாக இருப்பதோடு ஒன்றில் இருந்து ஒன்றைப் பிரிக்க முடியாததாகவும் இருக்கின்றது. ஒருவன் கடுமையாக உழைத்து அல்லது உடல் சோர்வுற்று இருக்கின்ற வேளையில், நிழல் இளைப்பாறவும், நீர் தாகத்தை தணிக்கவும் உதவுகின்றன. இவை மனிதனுக்கு நல்லதாகவே இருக்கின்றன ஆனாலும் இவற்றில் நிழல்தரும் நச்சு மரமும் நஞ்சு கலந்த நீரும் இருக்கவே செய்கின்றன. இவற்றைப் பயன்படுத்துகின்றவர்கள் இறக்க நேரிடுகின்றது. இதே போன்று தான் மனித வாழ்க்கையில் ஒருவனுக்குப் பல உறவினர்கள் நண்பர்கள் இருந்தாலும் அவர்களுள் ஒரு சிலராகிலும் அவனுக்கு எதிராக திரை மறைவில் செயற்படக் கூடும். அவ்வாறாயின் அவ்வாறு செய்பவரை இனங்கண்டு அவரை விட்டுவிலகிவிட வேண்டும்.

ஒருவன் தன்னுடைய சகோதரர்களோடு உட்பகை வைத்திருந்தாலும் அதாவது தன் சகோதரனுக்கோ அல்லது சகோதரிக்கோ எதிராக சதித் திட்டம் தீட்டி தன் மனதில் வைத்திருந்தால் அவன் படிப்படியாக அழிவை நோக்கிப் போய்க்கொண்டிருப்பான் எனக் கூறுகின்றார்.

“ஒன்றாமை ஒன்றியார் கட்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒற்றல் அரிது” **(குறள் - 886)**

ஒருவனுக்கு தன்னுடைய உறவினர்கள் அல்லது சுற்றத்தார் மட்டில் பகைமை ஏற்பட்டால் அவன் தன்னுடைய வாழ்நாளில் தன் உள்ளத்தில் ஏற்பட்ட பகையால் அழியாமல் இருப்பது அரிதாகவே காணப்படுகின்றது. இப்படிப்பட்ட பகை உணர்வு அவனை நாளுக்கு நாள் கொன்று கொண்டே இருக்கும். கிறீஸ்தவ முறைப்படி திருமணமான ஒரு ஆணும், பெண்ணும் ஈருடலாகவும் ஓர் உயிராகவும் இருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது. ஆனால் இங்கு

திருவள்ளுவர் எப்போது ஒரு குடும்பத்துக்குள் உட்பகை உண்டாகின்றதொ அப்போதிருந்தே அவர்கள் புறத்தே பொருந்தி இருந்தாலும் அகத்தே பொருந்தி இருக்க மாட்டார்கள் எனக் கூறுகின்றார். இப்படியான சூழ்நிலைகளில் இந்தக் குடி அதாவது இக்குடும்பம் படிப்படியாக வலிமை இழந்து குடும்ப வாழ்வு சீர்கெட்டு அழிந்து போகக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றது எனக் கூறுகின்றார்.

இறுதியாகக் கூறுகையில் அகத்தில் உடன்பாடு இல்லாதவர்களுடன் கூடி வாழும் குடும்ப வாழ்க்கையை, ஒரு குடிசையில் பாம்போடு உடன் வாழ்ந்தாற் போன்றது எனக் கூறுகின்றார்.

உடம்பாடு இல்லாதவர் வாழ்க்கை குடர்குள்
பாம்போடு உடனுறைக் தற்றது (குறள் - 890)

இவ்வாறாக உட்பகையை இந்த அதிகாரத்தின் ஊடாக வள்ளுவர் எடுத்துக்காட்டுகின்றார்.

## முடிவுரை

ஒட்டு மொத்தமாக நோக்கும் போது பகை எனப் பார்க்கின்றபோது நாம் பலவற்றை எடுத்துக் கொள்ளலாம். ஒரு நாட்டிற்குள் இன்னொரு நாடு படையெடுத்தால் அந்த இரண்டு நாடுகளுக்கு இடையிலும் பகை காணப்படும். இது ஒருபுறம் இருக்கும். அதே வேளை ஒரு நாட்டிற்குள் அந்த அரசுக்கு எதிராக, அல்லது ஒரு குழுவுக்கு எதிராக ஏற்படும் பகை உணர்வை உட்பகை என மெய்யியலாளர்கள் எடுத்துக் கூறும் அதே வேளை திருவள்ளுவர் ஒரு குடும்பத்திற்குள் இருக்கும் பகை உணர்வுகளை உட்பகையாகக் கொண்டும் விபரித்துள்ளார்.

நாம் தந்திரம் உள்ளவர்களாகவும், வீரம் உள்ளவர்களாகவும் இருந்து பல சாதனைகளைப் படைத்திருக்கலாம், ஆனால் உட்பகை ஒன்று எமக்கிருந்தால் எந்த வேளையிலும் அழிவு ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. என்னைப் பொறுத்தவரைக்கும் உட்பகை என்று ஒன்று இல்லாமல் ஒரு நாடோ, ஒரு அரசோ இருக்க முடியாது. அதே போன்று இப்படியான பகையை உடனடியாக நாம் நிறுத்திவிடவும் முடியாது. இவ்வாறான சந்தர்ப்பங்களை அந்த நாட்டு அரசனோ அல்லது அரசோ மிகவும் தந்திரமாக கையாள வேண்டும். இன்னொரு விதத்தில் நாம் இதை நோக்கினால் உட்பகை ஒரு நாட்டில் இருப்பது நன்மையான ஒன்றாகவும் இருக்கும். ஏனெனில் ஒரு பகைமை வரும் போதுதான் ஒரு அரசிற்கு தன்னைத் திரும்பிப் பார்க்கக் கூடியதாகவும், மக்களின் நிலை என்ன என்பதையும் உணர்ந்து கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். ஆனால் உட்பகை இல்லாமல் நீதியுடன் ஒரு நாடோ, அரசோ ஒன்றுபட்டிருந்தால் அதன் முன்னேற்றத்தை யாராலும் தடுக்க முடியாத அளவு வெற்றிகளை தனதாக்கிக் கொள்ளும் என்பது கண்கூடு.

# இலைபினிட்ஸ்

## (Gottfried Leibniz) (1646 – 1716)

- ஜெ. எல்மோ



17ம் நூற்றாண்டின் மிக முக்கியமான மெய்யியலாளர்களுள் ஒருவராக விளங்கும் இலைபினிட்ஸ் ஜேர்மனிய தேசத்தில் உள்ள லைப்சிக் (Leipzig) எனும் இடத்தில் பிறந்தார். தனது 15வது வயதிலே லைப்சிக் பல்கலை சென்று, 20வது வயதில் சட்டமானியானார். பல பிரபுத்துவ கட்டமைப்புகளுக்கு சட்ட ஆலோசகராகவும், இராஜதந்திரியாகவும் விளங்கியதுடன் பல புகழ்பெற்ற மெய்யியல், நுண்கணிதவியல், வரலாற்றியல், மொழியியல் சார்ந்த இவரின் கட்டுரைகள் இவரது காலத்திலும் பின் 18ம் நூற்றாண்டிலும் புகழ்பெற்று விளங்கின. அக்கால மக்கள் குறிப்பாக இளைஞர்கள் இவரின் ஆக்கங்களால் கவரப்பட்டார்கள்.

"'மொனாட்கள்' (Monads) என்று கூறப்படும் எண்ணிலடங்கா உணர்வுள்ள ஆன்மீக சக்தியின் அல்லது வலுவின் மையங்களே இப்பிரபஞ்சத்தை உருவாக்கியுள்ளன" என்று தனது மெய்யியல் சிந்தனையிலே குறிப்பிடுகின்றார். ஒவ்வொரு மொனாட்டும் இப்பிரபஞ்சத்தின் உன்னத நிலையைப் பிரதிபலிக்கும் சிறிய பிரபஞ்சங்களாக விளங்குகின்றன. இம் மொனாட்களால் உருவாகும் இப் பிரபஞ்சம் இறைத்திட்டத்தின் ஒருமித்த விளைவாகும். "பிரபஞ்ச ஒருமைப்பாட்டின் விளைவினாலே இறப்பு, நோய் போன்ற தீமைகள் ஒரு பகுதியாக எழுகின்றன" என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறினார்.

"உலகமானது ஒரு சாரத்தினையே (Substance) கொண்டு அமைந்துள்ளது" என்ற ஸ்பினோசா (Spinoza) என்ற மெய்யியலாளரின் கருத்தை இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. "உலகமானது பல சாரங்களின் தொகுப்பே" என்பது இவரது கருத்தாகும். இச் சாரங்களையே இவர் இறைவனால் படைக்கப்பட்ட ஆன்மீக சக்தியமைப்புக்கள் (Monads) என வரையறுக்கின்றார்.

மெய்யியலுக்கான இவரது படைப்புக்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்

1. இறைவனின் நன்மைத்தனம் (Goodness of God) பற்றிய இறையியல் கட்டுரைகள்
2. மனித சுதந்திரம் (The Liberty of Man)
3. தீமையின் பிறப்பு (The Origin of Evil)
4. மொனாட்டியல் (Monadology)
5. மனிதப் புரிந்துணர்வு பற்றிய கட்டுரைகள்

# The Beauty Of The Consciousness Is Seen On The Face

## A Philosophical Appraisal

**-S. F. Kirupananthan**

The history of civilization is the selection of collective memory of human destruction from the point view of victory. The human being, which is a biological species, destroyed many human beings of the same biological species. The present millennium has no future and war is contuing. The genocide, mass poverty, displacement, no proper water and housing facilities for millions of people are still continuing. We are called upon to look into the positive assertion of the understanding human being from the negative narrowness of existentialism. The otherness of the other in the philosophy Emmanuel Levinas sheds new light in the understanding of human feeling. The human responsibility is born in the face to face situation. Face is always a personal affinity.

# *Introduction to Research*

**- Hemamalini Kanapathipillai**

Research becomes indispensable in this vast and rapid scientific era. From the montessori children to the higher grade graduates this field of research is taking a prominent place.

What does research mean? Research is denoted by different names "endeavours, submission, planned programme, hard toil "etc. The word itself shows forth how much hard work and human effort are to be put into this field is in order to have a scientific and methodical result.

The word Research comes from the French word "Recercher", which means "Seeking". The Research has some purposes it tself as Karnap points out "Everything has its own purpose under its own existence". In that way, every research is for knowing the truth, understanding the contextual changes of the word, revealing the unknown things and so on.

As regards the division of research we could infer two divisions:

a) Scientific Research
b) Literature Research

Scientific research can be divided into two divisions.

a) Basic Research
b) Utilitarian Research

and Literature research can be divided into two divisions.

a) Preliminary Research
b) Secondary Research

# Groping in Darkness

**- Doubt fire**

Both blind and those who have sight will grope in darkness. The words 'sight' and 'vision' though they seem to have similar meaning are different in a profound way. 'Sight' refers to the physiological seeing whereas 'vision' refers to the philosophical insight into the realities. With regard to the first humanity has improved a lot. Physiological blindness is marvellously remedied not only in humans but also in animals. But with regard to the 'vision' humanity has to improve a lot. The insight into the realities of life, the far sightedness and future orientation are lacking to a great extent. Socrates called those people who do not have the far sight and vision of life as swines. The fact that the pigs cannot raise their head to look up is taken as an allegory to indicate those people who do not have the far sight and vision of life. Nowadays humanity needs a far sight and a new vision urgently.

There is a story among the people of Peru. They tell the story of a group of their people who, fourteen generations ago, retreated to a close valley at a great altitude in the Andean Alps, where they lived by themselves cut off from the rest of civilization. Due to the effect of the great altitude and a contagious disease, they gradually lost their sight till the whole people became totally blind. Their life went on, however, as they developed their other senses and adapted to the situation.

Once, however, their happiness was threatened by an unexpected event. A young explorer found these people in the valley.

The newcomer soon realized that he was the only sighted person in the company and decided to stay in order to help them, with his sight, to lead a better life. He wanted to prove to them the advantage of seeing. But, to his surprise, he could not convince them. He devised proofs, but they did not work. He asked them to surround him in a circle, and he would escape walking stealthily through a gap between them; but their ears were exceedingly sharp and they closed ranks before he could get through. They could collect faster the fruit of the trees, as they sensed its ripeness by smell and touch with greater speed and accuracy than he could do by sight. So the people thought that he was handicapped, and as such they treated him.

Meanwhile he had fallen in love with a girl in the group. The girl was blind, of course, but he thought that once they married, he could take her back to civilization, and medical treatment there could restore her sight. But things worked otherwise. When he asked the girl, she answered: "I also love and want to marry you. There is, however, one difficulty. I have consulted the elders of our people and they think that you are sick by being able to see. You have to undergo a surgery and must become as blind as we are. Then only our dream of getting married will be realized".

The explorer thought throughout the night. They want to make him blind. The operation is the removal of his eyes. They want to make him "normal", and normal for them means blind as they all are. In the darkness of the night, where blindness and sight merge in a common shadow, he becomes ready for the sacrifice and accepts the test of his love. He will willingly become blind.

But the early morning brings the first rays of the rising sun to play upon the enchanted valley. The beauty of its hills, its meadows, its river, its flowers awakes all at once with the irresistible charm. Then he tried for a moment to say good bye to it all, but found that he cannot. He will not be blind. He wakes up at last from the slumber of his romance and ran away from the valley of the blind.

This Peruvian story has a lot of insights. Those who grope in darkness many a time do not want to come into light. They want to remain in the slumber and they do not want to wake up. At the same

time they also criticize the people who wake up and try to get rid of them as troublemakers.

Groping in darkness is a common phenomenon in human history. It is a continuous phenomenon. At the same time it is also true that humanity will get the insight and new vision through the rare people who wake up from different types of slumbers. The poetic lines of our local poet Mr. A. Jesurasa will be a better conclusion here:

My identity and
My soul are getting spoilt.
I was asked to shrink into a monistic closed circle.

As time went on
I could not tolerate it anymore
Came out and started walking
They surrounded me with batons
And labelled me 'troublemaker'.

## A COMPARATIVE NOTION ON TYRANNY

**- A. Justin**

When, we look at History, we can say, that many countries were under the reign of Tyranny. Hence, regarding Tyranny many philosophers and specially Thiruvalluwar give their notions in different ways. The philosophers such as; John Locke, St. Thomas Aquinas, Hobbes and Machiavelli give there conflicting ideas about Tyranny.

When we look at the idea of St. Thomas Aquinas on Tyranny, He as a Christian philosopher and theologian, having the notion of One God, is fully against Tyranny because Tyranny abolishes the dignity of a person. According to Machiavelli in his book called The Prince, says, that a Prince should reign over the people as a lion and a fox. Then only it is possible for him to do what he wants and wishes. When a king does not win over the hearts of the people by love then he has to be a dictator. So, we can see that he promotes Tyranny. Hobbes looked at the natural man as an "Immense Shark" and the peaceful situation of man as Unnatural.

According to Thiruvalluwar, when the reign of the king is honourable, then the people will be in happiness, and Joy; and when it is in Tyranny people will lose their happiness, Joy and fullness. It is a pathetic stage for people. Specially, the country will not flourish and the arts of the country will be eliminated. Therefore, Tyranny is not apt for the people.

Generally, Tyranny destroys the happiness, Joy and dignity of people and therefore, it should be eliminated from the society.

# SPIRITUAL CHARACTER

**- "Velmaran"**

Already two thousand years ago the Tamil people understood the function, feelings and thoughts of the human body and they generally included all these in the intellect.

They found the technique and the great power of these external senses. When the five senses work together a person is considered a full man; when one of the sense is defective then he is considered not perfect. Therefore, the orderly function of the senses makes man perfect. Having control over the senses a great person is one who can control his senses.

Due to wrong and deceptive perceptions persons fall into problems and dangers. Hence, the senses should be used in the life of a person in order to develop his good characters and qualities. Then they become useful to others also. Thus, the Spiritual life consists in avoiding the bad characteristics and in developing the good ones.

Hence, the first and foremost need for the Spiritual life is the controlling of the senses from bad habits and characters. These do not come through birth but through our daily practices, exercises, experiences and perseverance. Specially, to make these actions the needed power comes from the Supernatural Power called God. We get the controlling power over our senses, through worshiping and doing his will. Thus, we may avoid ignorance and sin and live a long life.

# Envy According to Some Philosophers

- S. Duke Vincent

Envy, it is within itself. It is an anger not clearly known. But it burns itself within the heart of the person. Envy is very dangerous. It can destroy the person fully without the person knowing it. Envy can be between kings, politicians, societies, groups and even in families.

Many philosophers, such as; Plato, Aristotle, St. Augustine, Machiavelli, Karl Marx and specially Thiruvalluwar, give their notions on Envy in different ways.

According to Plato, it is a "Feverish condition". In a Government there are three kinds of people; a) Governer b) Warriors c) Workers. In two ways the Governer can face threat such as; local threats and foreign threats. Local threat means Governer faces the challenges from the warriors and the workers when he does not give the proper salaries and respect to the workers. According to Aristotle, the main cause for Envy is "Poverty". To solve the problem of Envy, poverty must be eliminated. St. Augustine says, that when there is no justice in the country, then there is no peace. When, there is no justice in the country, then people will be in a cruel and pathetic situation. There will be confusion among the people and Governers. When there is Justice in the country then there is peace. Otherwise, it will be a country of barbarians and thugs. According to machiavelli, whether it is envy or feverish condition from foreign countries, to solve these problems, a king should have some qualities, such as; Governer should know the likes and dislikes of the people of his country, be generous and merciful and specially, he should as a lion have braveness and sometime cunning as a fox. Then only he can know the problems of the country and make proper ways to solve the problems. Karl Marx says, Envy starts when the rich people suppress the poor workers.

According to Thiruvalluwar, generally the shadow of the trees and the waters help tired persons, but there are some poisonous trees and water which affect the people, even lead them to death. Like that, in

the life of a person, there are relatives and friends but some of them are like enemies behind the scene. Specially, he says, a person who is in envy, creates problems, destructions and atrocities to himself and to others. Then, his life will be in the brink of death and a holocaust.

Therefore, in one way Envy is dangerous to the country but in another way it is an advantage because the country can reflect and recall the likeness of the people and the life of the people and provide for the betterment of the people.

கடந்த மூன்று ஆண்டுகளாக மெய்யியல் நோக்கு சஞ்சிகையின் துணையாசிரியராக அரும் பணியாற்றிய சூ. டக்ளஸ் மில்ரன் லோகு அவர்கள் விடை பெறுகின்றார். அவரது அற்புதமான பணிகளுக்கு மெய்யியல் நோக்கு நன்றி நவில்கிறது. விநியோகப் பணிகளில் ஈடுபட்டுழைத்த வெ. எமில் எழில்ராஜ், ஜெ. அ. ஜெயரஞ்சன் ஆகியோருக்கும் எமது நன்றிகள். புதிதாக துணையாசிரியர் பொறுப்பை ஏற்றிருக்கும் அ. றொக்சன் குரூஸ் அவர்களை வரவேற்கிறோம். விநியோகப் பொறுப்பில் தொடர்ந்து ஜெ. எல்மோ அருள்நேசன் பணியாற்றுவார். புதிதாக இணைந்துள்ள கு. ஜெயராசா அவர்களையும் வரவேற்கிறோம்.

- ஆ-ர்

கனவு எங்கில்லையோ மனிதன் அங்கே அழிவுறுகிறான். எங்கே கொள்கையில்லையோ அங்கே தொலைந்து போகிறான்.

உயர்ந்த இலட்சியம் இல்லாதவன் புதிய சாதனைகள் படைக்க முடிவதில்லை.

நன்றி : மலரும் பருவம்

# Gottfried Leibniz (1646 – 1716)

- J. Elmo



Gottfried Leibniz was born in 1646 at Leipzig, Germany. He was one of the central figures of 17th century philosophy. Not only was he a philosopher, he was also a mathematician, historian, and linguist. His essays on philosophy attracted the youngsters of his age and it became very famous in the 18th century.

In the philosophy expounded by Leibniz, there is an infinity of substances, created and maintained in existence by God. These substances were called monads. The universe is composed of countless conscious centers of spiritual force of energy. Each monad represents an individual microcosm, mirroring the universe in varying degrees of perfection and developing independently of all other monads. Humans, however, with their limited vision, cannot accept such evils as disease and death as part of a universal harmony.

Bibliography:

CHAN M, STEVEN, "Gottfried Leibniz" in the Classies of western philosophy, USA; Hackett Publishing Company, 1977, p. 437.

Flew, Antony, "Gottfreid Leibniz" in the Dictionary of philosophy, Britain; Macmillan Press Ltd. 1979, p. 184.

Carl, Abbott, "Leibniz" in the Microsoft Encarta Encyclopedia, USA; Microsoft Corporation, 2002, disc 02.

★ விதியின் மீது பழியைப் போட்டு, வீதியிலே வலம் வராதே.

★ உன்குறையை உள்ளபடியே ஏற்று பிறர் உன்னைப் பாராட்டும் படி வாழ்ந்திரு.

நன்றி: மலரும் பருவம்

# Glossary

1. Absolute Idealism - நிறைவு கருத்துவாதம்
2. Altruism - பிறர்நலவாதம்
3. Associationalism - இயைபுவாதம்
4. Abnormal Psychology - பிறழ்நிலை உளவியல்
5. Animalism - விலங்குளவியல்
6. Applied Psychology - நடைமுறை உளவியல்
7. Business Psychology - வர்த்தக உளவியல்
8. Black mail - பயமுறுத்தி செயற்படல்
9. Behaviourism - நடத்தைவாதம்
10. Critical Realism - திறனாய்வு மெய்மைவாதம்
11. Child Psychology - குழந்தை உளவியல்
12. Clinical Psychology - வைத்திய உளவியல்
13. Criminological Psychology - குற்றவியல் உளவியல்
14. Counselling Psychology - மனநிலை ஆலோசனை உளவியல்
15. Criteria - அளவை
16. Cognitive Psychology - அறிகைக் கொள்கை
17. Dialective Method - விவாதமுறை வழி
18. Determinist - நிர்ணயவாதிகள்
19. Deterent Punishment - எச்சரிக்கைத் தண்டனை
20. Dope peddler - போதைப்பொருள் வியாபாரம்
21. Differential Psychology - வேற்றுமையுளவியல்
22. Development Psychology - வளர்ச்சிநிலை உளவியல்
23. Differential - வேற்றுமை
24. Empiricism - அனுபவவாதம்
25. Educational Psychology - கல்வி உளவியல்
26. Experimental Psychology - பரிசோதனை உளவியல்
27. Functionalism - செயல்நிலை வாதம்
28. Fatalist - விதிவாதிகள்
29. Genetic Psychology - பிறப்பு நிலை உளவியல்
30. Hedonism - இன்பவாதம்
31. Indeterminist - நிர்ணயமற்றவாதிகள்
32. Inference - அனுமானம்
33. Introspection - அகநோக்கு
34. Institutional Psychology - நிறுவன உளவியல்
35. Interpretation of Dreams - கனவுகளின் உட்பொருள்
36. Industrial Psychology - தொழிற்சாலை உளவியல்
37. Knowledge of description - வருணனை அறிவு
38. Knowledge by acquaintance - பரிச்சய அறிவு
39. Knowledge of things - பொருட்களைப் பற்றிய அறிவு
40. Knowledge of truth - உண்மையைப் பற்றிய அறிவு
41. Light post punishment - மின்கம்பத் தண்டனை
42. Legal - சட்டவுளவியல்
43. Logical Positivism - தர்க்கப் புலன்நிலை வாதம்
44. Medical Ethics - மருத்துவ ஒழுக்கம்
45. Moral Concepts - ஒழுக்க எண்ணக் கருத்துக்கள்
46. Moral Truth - ஒழுக்க உண்மை
47. Methodological Solipsism - தனியான்வாதம்
48. Meta Language - உருவ மொழி
49. Naturalism - இயற்கைவாதம்
50. Non Apprehension - அனுபலப்பத்தி

# மெய்யியல் நோக்கு

(வருடம் இருமுறை)

தொகுப்பாசிரியர்: யோ. போல் றொகான், L. Ph. (Rome)

துணையாசிரியர்: அ. றொக்சன் குரூஸ், B. Ph (Rome)

விநியோகம்: ஜெ. எல்மோ அருள்நேசன், (இளங்கலை மாணவன்)
கு. ஜெயராசா, (இளங்கலை மாணவன்)

ஆலோசகர்: லூயிஸ் பொன்னையா, அ.ம.தி. L. Ph. (Rome)

வெளியீடு, விநியோகம்: மெய்யியல்துறை
சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

## MEI - IYAL NOKKU

(Bi - annual)

Editor : J. Paul Rohan, L. Ph. (Rome)

Sub - Editor: A.Rocksan Croos, B.Ph. (Rome)

Distributors: J. Elmo Arulnesan (Under graduate)
G. Jeyarasa (Under graduate)

Consultant: Louis Ponniah, O. M. I., L. Ph. (Rome)

Publishers, Distributors:

Faculty of Philosophy
Xavier's Seminary
Columbuthurai, Jaffna.

**இலச்சினை விளக்கம்:**

எல்லையில்லா அகிலத்தில்,
எல்லையுள்ள உலகினில்,
சிந்திக்கும் மனிதன்
எழுப்பும் கேள்விகள்
எழுத்து வடிவில்

**Our Logo:**

Boundless Universe
Limited World
Reflecting Man
Raising Questions
In Written Form.

*அட்டையில் உள்ள    உடனே விழித்தெழு!*

– பொதுவானதொரு சிந்தனைக்கு உருவும், வரியும் கொடுத்தவர்
றபியேல் சஞ்ஜே பெனடிற்

# மெய்யியல் நோக்கு

அன்புமிக்க வாசகர்களே!

இவ்வெளியீடு பற்றிய உங்கள் கருத்துக்கள், விமர்சனங்களை ஆவலோடு எதிர்பார்க்கின்றோம்.

ஓர் ஆண்டிற்கு இரண்டு இதழ்களாக 'மெய்யியல் நோக்கு' தொடர்ந்து வெளிவருகிறது.

தனிப்பிரதி ஒன்றின் விலை ரூபா 25.

"அறிவாளிகளுக்கும், பிரபுக்களுக்கும் என்றிருந்த மெய்யியலை வீதிகளுக்கும், பாதையோரங்களுக்கும், சந்தைகளுக்கும் கொண்டு வாருங்கள்."

-சோக்கிரட்டீஸ்

அனைத்துத் தொடர்புகளுக்கும்:


மெய்யியல் நோக்கு
சவேரியார் குருத்துவக்கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.